உயிரிலும் மேலான நபிகள் நாயகம் صلى الله عليه وسلم அன்னவர்களை புகழ்ந்து ஸஹாபி க∴பு இப்னு ஸுஹைர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களால் பாடப்பட்ட புகழ்பெற்ற "பானத் சுஆது" என்ற கஸீதாவின் தமிழாக்கம்.

இதனை அழகு தமிழில் மொழிபெயர்த்து அனைவரும் பயனடைய செய்த ஆலிம் கவிஞர் தேங்கை ஷறபுத்தீன் மிஸ்பாஹிக்கும் வெளியிட்ட சுலைமானியா பப்ளிஷருக்கும் அல்லாஹ் காலமெல்லாம் அருள் புரிவானாக...


WWW.MAILOFISLAM.COM

# بردة شريف و بانت سعاد

## கன்னித் தமிழில்

# கஸீதத்துல் புர்தா

# பானத் சுஆத்



من حجّ فزار قبري بعد موتي كان كمن زارني في حياتي

ஆலிம் கவிஞர் தேங்கை மிஸ்பாஹி

சுலைமானியா பப்ளிஷர்ஸ்

بردة شريف و بانت سعاد

கன்னித் தமிழில்

கஸீதத்துல் புர்தா

பானத் சுஆத்



ما بين قبري ومنبري روضة من رياض الجنّة

ஆலிம் கவிஞர் தேங்கை மிஸ்பாஹி

சுலைமானியா பப்ளிஷர்ஸ்

# கன்னித் தமிழில்

# கஸீதத்துல் புர்தா, பானத்சு ஆது!

## (நேச நபிகளார், நேரிலும் கனவிலும் போர்த்திய – நேரிய பொன்னாடைகள்)

ஆக்கம் :
ஆலிம் கவிஞர், அல்ஹாஜ்
**தேங்கை ஷறபுத்தீன் மிஸ்பாஹி**
அரபிப் பேராசிரியர்
ஆர்.டி.பி. கலை அறிவியல் கல்லூரி,
பாபநாசம், தஞ்சை

வெளியீடு :
**சுலைமானியா பப்ளிஷர்ஸ்**
மஃமூர் சென்டர், முதல் மாடி,
81, அங்கப்பன் தெரு, சென்னை – 1.
தொலைபேசி : 252 70 550
செல் : 94443 55551

# சமர்ப்பணம்

இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் பொதுச் செயலாளராய் - தமிழ் மாநிலத் தலைவராய் - இனிய பணியாற்றிய பண்பாளர்; இந்த உன்னதச் சமுதாய உயர்வை நாடி, ஊதுபத்திபோல் வாழ்ந்த உத்தமர்; பொன்னகை அகத்தால் - புன்னகை முகத்தால் - எமையீர்த்த தலைவர்; சிந்தையில் நிறைந்த **சிராஜுல் மில்லத் மர்ஹூம் A.K.A. அப்துஸ் ஸமது சாஹிப்** அவர்களுக்கும்,

'பத்று - உஹது ஸஹாபாக்கடிளின் வீரவாள் வீச்சினை இவரின் பேனா முனையில் கண்டு பிரமிக்கிறேன்' என்று, 'கவிக்கோ' குறிப்பிட்டது போல் - அக்கினிக் குஞ்சுகளை அடைகாத்த எழுதுகோல் வேந்தர்; செந்தமிழ்ச் சொல்வளத்தால் - சிந்தனைத் தரத்தால் - சிலேடை நயத்தால் - உளங்கவர்ந்த நேசர் - **மர்ஹூம் சிராஜ் அப்துல் ஹை சாஹிப்** அவர்களுக்கும்,

நாடி நரம்புகளுக்கு முறுக்கேற்றும் வண்ணம் பரணிபாடி, சமுதாயத்திற்கெதிரான சக்திகளுக்குச் சவாலாகத் தன் எழுத்தாணியால் போர்முரசு கொட்டிய அன்பர், **'முஸ்லிம் முரசு' ஆளூர் ஜலால் (மர்ஹூம்)** அவர்களுக்கும் **இந்த நன்னூல் சமர்ப்பணம்!**

இந்த மும்மணிகளின் ஆன்மாவிற்கும் யான் முதன் முதலாகப் 'புனித ஹஜ் - பூமான் நபி ஸியாரத்' பேறு பெற்றிட ஆவன செய்த அன்புப் பெருந்தகை **திருப்பனந்தாள் கமால்பாட்சா ஹாஜி**யாரை ஈன்றெடுத்த தாய்தந்தையர் ஆன்மாவிற்கும், இந்நூலைப் புனித ரவ்ழா முன் காணிக்கையாக்கிட மீண்டும் ஒரு 'ஹஜ் - ஸியாரத்' வாய்ப்பை வழங்கிய **கூத்தாநல்லூர் டாக்டர் ஜியாவுத்தீன்** அவர்களை ஈன்றெடுத்த தாய்தந்தையர் ஆன்மாவிற்கும் இந்நூலைப் படித்தோர் பெறும் பயனை - யா அல்லாஹ்! நீ அடையச் செய்வாயாக!

**ஆசிரியர்**

## அட்டைப்பட விளக்கம்

இந்நூலில், அரபி மொழி படிக்கத் தொடங்கும் பக்கத்து அட்டையை - தூதர் நபிநாதர் துயில் கொள்ளும் தூயநல்லிடமாம் புனித ரவ்ழா ஷரீஃபின் முகப்புப் பகுதி அலங்கரிக்கிறது. இந்தப் பக்கத்தில் இடம் பெற்ற அரபித் திருவாசகத்தின் பொருள்:

**“ஒருவர் ஹஜ்ஜை முடித்து, என்னுடைய மரணத்திற்குப் பின் - என் கப்றைத் தரிசித்தால், என் வாழ்நாளில் என்னைத் தரிசித்தவர் போலாகிவிட்டார்”** என்ற நபிமொழியாகும்.

இந்த நூலில், தமிழ் மொழி படிக்கத் தொடங்கும் பக்கத்து அட்டையை - புனித மஸ்ஜிதுந் நபவியின் மகுடமாய் அமைந்த ‘ரவ்ழத்துல் ஜன்னா’ எனும் பகுதி, அலங்கரிக்கிறது. இந்தப் பக்கத்தில் இடம் பெற்ற அரபித் திருவாசகத்தின் பொருள்:

**“என்னுடைய கப்றுக்கும் மிம்பறுக்கும் இடைப்பட்ட பகுதி, சுவனப் பூங்காக்களில் ஒரு பூங்காவாகும்”** - என்ற நபி மொழியாகும்.

## வாசகர்களின் முக்கிய கவனத்திற்கு...

இந்நூலில் இடம்பெற்ற - பானத் சுஆதின் பொருளைப் படிப்பதற்கு முன், “பானத் சுஆது ஒரு கண்ணோட்டம்” என்ற பகுதியையும், “பானத் சுஆது இயற்றிய கவிஞரும் இயற்றப்பட்ட சூழலும்” என்ற பகுதியையும் அவசியம் படிக்கவும். இல்லையென்றால், உங்களுக்கு ஏற்படும் புரியாத குழப்பத்திற்கு ஆசிரியர், பொறுப்பல்ல!

**ஆசிரியர்**

# நுழைவாயிலில்...!

**அருளாலே அன்பால், அளவில்லா உந்தன்**
**துருவற்ற பெயரால் தொடக்கம்யான், அல்லாஹ்!**
**அனைத்துல காளும் அதிபதி யுனக்கே**
**அனைத்துநற் புகழும் அமைந்திடும், அல்லாஹ்!**

**நன்னய நபிமேல் நாளும் பொழுதும்**
**பொன்மய 'ஸலவாத்' பொழிந்தருள் அல்லாஹ்!**
**பார்புகழ் 'புர்தா', 'பானத்சு ஆதின்'**
**சீர்தமி ழாக்கம் சிறக்கச்செய் அல்லாஹ்!**

**கருணைநன் னபிமேல் கஃபுபின் ஸுஹைர் போல்**
**உருகிப்பா வடிக்கும் ஊக்கம்தா அல்லாஹ்!**
**யான்பெற்ற பெயரின் எழிலார்முன் னோடி**
**தேன்கவி பூஸிரி திறனருள் அல்லாஹ்!**

அனைத்துலகின் அருட்கொடையான - அல்லாஹ்வின் திருத்தூதர் - அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்களைத், தன் அருள்மறை மூலம் அல்லாஹ்வே, போற்றிப் புகழ்ந்துள்ளான். என்வே அல்லாஹ் போற்றிய அடியாரை - அடியார்கள் தம் நாவினாலோ, எழுது கோலினாலோ ஏற்றிப் போற்றி எல்லையைப் பிடிப்பது, இயலாத விஷயம். எனினும், உயிருக்குயிரான - உயிரினும் மேலான - உத்தமத் திரு நபி (ஸல்) அவர்களைத் தம்மால் இயன்ற வரையிலும் புகழ்ந்துரைத்துத், தமது நாவினைப் புனிதப்படுத்திக் கொள்ள முயன்ற புண்ணிய பூமான்கள் - அருள் நபித்தோழர் **ஹஸ்ஸான் இப்னு தாபித் (ரழி)** அவர்களிலிருந்து தொடர்கிறார்கள்.

'என் சொற்களால், நபிகளாரைப் புகழ்ந்திட என்னால் இயலவில்லை. மாறாக - நபிகளால் தான் - என் சொற்களுக்குப் புகழைத் தேடிக் கொள்கிறேன்', எனும் பொருள்பட -

**மாஇன் மதஹ்து முஹம்மதன்பி மகாலத்தீ**
**லாகின் மதஹ்து மகாலத்தீ பிமுஹம்மதீ**

என்று பாடி, அருள்நபிப் புகழ்ப்பாக்களுக்கு அடித்தளம் அமைத்து, அளப்பரிய புகழ்ப்பாக்கள் இயற்றியதன் மூலம், அண்ணலாரின் அழகிய அன்புக்கு ஆளாகிய அருட்கவி

ஹஸ்ஸான் (ரழி) அவர்கள் - அண்ணலாரின் திருவாயினால் - 'ஜிப்ரீலைக் கொண்டு இவரை, அல்லாஹ் வலிமைப்படுத்துவானாக!' என்று வாழ்த்தப்படும் வாய்ப்பினைப் பெற்றார்கள்.

இந்தக் கவிஞரின் வழியொட்டி ஏந்தல் நபிகளாரைப் போற்றிப் புகழ்ந்ததன் மூலம், பூமான் நபிமணியால் பொன்னாடை போர்த்தப்பட்ட கவிஞர்கள் இருவர், வரலாற்றில் இலங்குகின்றனர். இவர்களில் ஒருவர், வள்ளல் நபிகளாரின் வாழ்நாளில் - மஸ்ஜிதுல் நபவியில் வைத்து - தூய தோழர்களின் முன்னிலையில் நேரில் பொன்னாடை போர்த்தப்பட்டார். மற்றொருவர், தன் மனமுருகச் செய்யும் மணியான கவிதையினால் - கனவின் மூலம் - பொன்னாடை போர்த்தப்பட்டார். நேரில் போர்த்தப்பட்டவர் '**பானத் சுஆது**' பாமாலை இயற்றிய கவியரசர் **கஃபு இப்னு ஸுஹைர் (ரழி)** அவர்கள், ஆவார். கனவின் மூலம் போர்த்தப்பட்டவர், '**கஸீதத்துல் புர்தா**' பாமாலை இயற்றிய கவிஞர், **ஷறபுத்தீன் முஹம்மதுல் பூஸிரி (ரஹ்)** அவர்கள் ஆவார்.

இவ்விரு பொன்னாடைக் கவிதைகளில், இரண்டாவது கவிதை, பாமர மக்களுக்கும் கூட நன்கு பழக்கமானதாகும். ஆனால், முதல் கவிதை, இலக்கிய உலகின் எல்லைக்குள்ளேயே - ஏனோ, நின்றுவிட்டது. இந்நிலையில் ஒருநாள் **சுலைமானியா பப்ளிஷர்ஸ்** உரிமையாளர், அன்பிற்கினிய **ஷேக் சுலைமான் ஹாஜி** அவர்கள் என்னை நோக்கி 'சுந்தரத் தமிழில் சுப்ஹான மவ்லிதை மொழிபெயர்த்துத் தந்த உங்கள் கையினால் கன்னித் தமிழில் கஸீதத்துல் புர்தாவையும் மொழி பெயர்த்துத் தர வேண்டும்!' என்று கேட்டுக் கொண்டார்கள். அப்போது யான் ஒரு நினைவையெண்ணி நெகிழ்ந்து போனேன்.

ஆம்! சுந்தரத் தமிழில் சுப்ஹான மவ்லிதை யான் மொழிபெயர்த்ததால் 'ஆன்மீக அருட்சுடர்' காயல் மாநகரக் கனிவுச் சுரங்கம் - சங்கைக்குரிய **அல்ஹாஜ் M.Z. ஜலீல் முஹ்யித்தீன் ஹழ்ரத் காதிரிய்யுல் காஹிரிய்யி** அவர்கள் என் மீது பாசமழை பொழிந்து, நேச நபியின் வாச ரவ்ழா முன் யான் நெக்குருகி நிற்கும் நேரிய வாய்ப்பினை இனிய ஹஜ்ஜுடன் இணைந்து 1999 -ம் ஆண்டு வழங்கினார்கள். அப்போது, புனித மதீனாவில் வைத்து யான் அவர்களை நோக்கி, 'இந்தப் புண்ணிய வாய்ப்பை எளியேனுக்கு - இம்மியும் எதிர்பாராத நிலையில் கருணை நபிக் காதலினால் - அடையச் செய்த, தாங்கள் ஏதாவதொரு ஸலவாத்தை 'வழீ∴பா' வாக ஓதிவரச்

சொல்லித் தாருங்கள்!' என்றேன். அப்போது அவர்கள் என்னை நோக்கி, 'உங்களுக்கு பூஸிரி இமாமுடைய 'ஷறபுத்தீன்' என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. எனவே, அவர்களைப் போல் நீங்கள் நபி புகழ்க் கவிஞராக மேலும் வளருங்கள்!' என்று வாழ்த்தி, புனித மகான் பூஸ்ரி இமாமின் பெயரிணைந்து வரும் ஒரு ஸலவாத்தை எனக்குச் சொல்லித் தந்தார்கள்.

'புர்தாவை மொழி பெயர்த்துத் தரவேண்டும்' என்ற, விருப்பத்தை ஷேக் சுலைமான் ஹாஜியார் வெளியிட்ட போது, இந்த ஈராண்டுக்கு முந்தைய ஆசிமொழி - என் நினைவுக்கு வந்து, நெஞ்சை நெகிழ வைத்தது. எனவே, சுலைமான் ஹாஜியாரின் எண்ணத்திற்கு இசைவு தெரிவித்த யான் - அவர்களை நோக்கி, 'புர்தா ஷரீபை' என் மனத்தைக் கவர்ந்த மர்ஹூம், மவ்லானா N.S.N. **முஹம்மது அப்துல் காதிர் பாகவி** (நவ்வறல்லாஹு மர்கதஹு) அவர்கள் ஏற்கனவே மொழி பெயர்த்திருந்தாலும் அன்னாரின் எண்ணப் போக்கிலிருந்தும் எழுத்து நடையிலிருந்தும் - முற்றிலும் வேறுபட்ட பாங்கில் - எமக்குரிய அணுகு முறையில் - இன்ஷா அல்லாஹ், மொழி பெயர்த்துத் தருகிறேன்' என்றேன். அந்த வாக்குறுதிதான் இந்த வனப்பான நூல்!

அரபி இலக்கணத்தை ஆயிரம் பாக்களாக '**அல்ஃபிய்யா**' எனும் பெயரில், **இப்னு முஃதீ** என்பவர் முதலில் இயற்றினார். பின்னர் - **இப்னு மாலிக்** என்பவர் ஆயிரம் பாக்களாக - இன்னொரு அல்.்.பிய்யா எழுதி அதில் - தனக்கு முந்தைய இப்னு மு.்.தீ குறித்து, "அவர் - காலத்தால் முந்தியதால் - சிறப்பைச் சேகரித்தவர். என் இனிய பாராட்டுக்குரியவர்" எனும் பொருளில் -

**"வஹுவ பி ஸப்கின் ஹாயிஸுன் தஃப்ழீலா**
**முஸ்த்தவ்ஜி புன்ஸ னாஇயல்ஜ மீலா"**

என்று குறிப்பிட்டு நினைவு கூர்ந்து, முந்தைய அல்.்.பியாவுக்கு வேறுபட்ட புதுப்பொலிவுடன் தமது அல்.்.பியாவை அமைத்ததுபோல், 'கன்னித் தமிழில் கஸீதத்துல் புர்தா' எனும் இந்நூலில் யான் மர்ஹூம் N.S.N. பாகவியை இப்னு மாலிக்கின் நேரிய சொற்களால் நினைவு கூருகிறேன்.

பூமான் நபிகளார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) போர்த்திய இரு பொன்னாடைகளில் கனவுப் பொன்னாடை - படித்தோரிடமும், பாமரரிடமும், பக்தி

மணத்துடன் ஓதப்படும் வண்ணம் - பரவலான புகழ் பெற்றிருக்கும் நிலையில், நேரடிப் பொன்னாடை வெளியுலகில் வெளிச்சம்போட்டுக் காட்டப்படாமல் இலக்கியப் பேழைக்குள் இறுக்கமாகப் பூட்டி வைக்கப் பட்டிருக்கிறதே! ஏனிந்த நிலை? நேரடிப் பொன்னாடையின் நேர்த்தியான இழைகளையும், நிலவை விஞ்சும் பேரழகையும் ஒளியையும் கருணை நபிகளாரை நிரப்பிய கண்கள், கண்டு களிக்க வேண்டாமா? எத்தனை காலம்தான், இந்தப் பொன்னாடை முத்தைச் சிப்பிக்குள்ளேயே மறைத்து வைத்திருப்பது? என்றெல்லாம் நெடுநாட்களாக - எம் நெஞ்சில் எழுந்த வினாக்களின் விடைதான், இறையருளால் 'பானத் சுஆதின்' தமிழாக்கமாகத் தங்கள் கரங்களில் தவழ்கிறது.

இவ்விரு பொன்னாடைகளையும் எழில் வடிவில் பதிப்பித்த **சுலைமானியா பதிப்பகத்தாருக்கு** என் இனிய நன்றி! பானத் சுஆதிற்கு மகத்தான மதிப்புரை வழங்கிய மார்க்கப் பேரறிஞர், வேலூர், பாக்கியாத்துஸ் ஸாலிஹாத் அரபுக் கல்லூரி முன்னாள் முதல்வர், சங்கைக்குரிய, **மவ்லானா, அல்ஹாஜ் P.S.P. ஜைனுல் ஆபிதீன் ஹழ்ரத் கிப்லா** அவர்களுக்கும், ஆசியுரை வழங்கிய ஆசான் **கவிக்கோ அப்துல் ரகுமான்** அவர்களுக்கும் என் ஆழிய நன்றி!

புனித புர்தாவிற்கு மதிப்புரை வழங்கிய மாண்பாளர், மாநில உலமாப் பேரவைச் செயலர், **மவ்லானா T.J.M. ஸலாஹுத்தீன் ரியாஜி ஹஜ்ரத்** பெருந்தகைக்கும், வாழ்த்துரை வழங்கிய வாஞ்சையாளர் **மவ்லானா, அல்ஹாஜ் O.M. அப்துல் காதிர் ஹஜ்ரத்** பெருந்தகைக்கும், ஆசியுரை அளித்த ஆஷிகுர் ரஸூல் சங்கைமிகு **பிலாலிஷாஹ் ஜுஹூரி** பெருந்தகையாளருக்கும், அணிந்துரை வழங்கிய அன்புப் பேராசிரியர், **கவிமாமணி தி.மு. அப்துல் காதிர்** அவர்களுக்கும் எந்தன் இனிய நன்றி!

வல்ல நாயன் அல்லாஹ் - இந்த நன்னூலை, தமிழ்கூறும் நல்லுலகம் அன்புக் குழந்தையைப் போல் அரவணைத்து வரவேற்கும் வாய்ப்பை வழங்கிடுவானாக! இந்நூலை, இதயக்கண்மணியாம் ஏந்தல் நபிகளாரின் இதயத்தில் நாங்கள் இடம் பெற்றிட ஒரு இணைப்புப் பாலமாக அமைத்திடுவானாக! ஆமீன்!!

01-02-2001 அன்பன்
பாண்டிச்சேரி **தேங்கை ஷறபுத்தீன்**

## பதிப்புரை

வல்லான் அல்லாஹ்வின் வளமான அருளால் வள்ளல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் வற்றாத ஆசியினால் எங்கள் **சுலைமானியா பப்ளிஷர்ஸ்** நிறுவனம் 21 ஆம் ஆண்டில் இன்முகத்துடன் அடியெடுத்து வைக்கிறது. மறைந்த மர்ஹூம் பன்னூலாசிரியர் **M.R.M. அப்துர் ரஹீம்** அவர்களின் அறிவுச் சுரங்கமான அரிய நூல்களையே பதிப்பித்து வந்த எங்கள் பதிப்பகம் ஆலிம் கவிஞர் தேங்கை ஷர்புத்தீன் மிஸ்பாஹி அவர்களின் தொடர்புக்குப் பின் அரபிமொழி இலக்கியங்களை சுன்னத்து-வல் ஜமாஅத்தின் சுடரொளி வீசும் சுகந்த நூல்களை பதிப்பித்து வெளியிடத் துவங்கியுள்ளது. **சுந்தரத் தமிழில் சுபுஹான மௌலிது, முத்தமிழ் மொழியில் முஹ்யித்தீன் மௌலிது, ஐமணி மாலை** ஆகிய நூல்களை வெளியிட்ட எங்கள் நிறுவனம் இப்போது ஆலிம் கவிஞரின் அரிய ஆக்கமான **கன்னித் தமிழில் கஸீதத்துல் புர்தா, பானத் சுஆத்** எனும் இனிய நூலை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறது.

இந்நூலில் இடம் பெற்றுள்ள இருபெரும் இலக்கியங்கள் எம்பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களால் நேரிலும் கனவிலும் பொன்னாடை போர்த்தப்பட்டு சிறப்பிக்கப்பட்ட அரிய இலக்கியங்கள் என்பதை எண்ணும்போது எங்கள் இதயம் களிப்படைகிறது. பூமான் நபி (ஸல்) அவர்களின் பொன்னாடை இழைகள் எங்கள் **சுலைமானியா பதிப்பகத்தின்** வாயிலாக தமிழ் முஸ்லிம் சமுதாயத்தின் கரங்களில் புதுப்பொலிவோடு தவழ்வதில் நாங்கள் பூரிப்படைகிறோம்.

'**கஸீதத்துல் புர்தா**' ஏற்கனவே நான்கு மொழி பெயர்ப்புகளை நம் தமிழில் பெற்றிருப்பினும் ஆலிம் கவிஞரின் இந்த மொழிபெயர்ப்பு முற்றிலும் வேறுபட்ட புதிய பாதையில் தன் பயணத்தை அமைத்து இருக்கிறது. இத்துடன் இணைந்த '**பானத் சுஆத்**' இதுவரையில் தமிழில் மொழிபெயர்க்கப்படாமல் தமிழ் முஸ்லிம் சமுதாயத்திற்கே நூல் வடிவில் இதுவரை அறிமுகமாகாமல் மறைந்திருந்த ஒரு புதையல் ஆகும். இப்புதையலை எங்கள் பதிப்பகத்தின் மூலமாக தமிழ் முஸ்லிம் சமுதாயத்தின் கரங்களில் தவழச் செய்த வல்லான் அல்லாஹ்வுக்கே வான்புகழ் அனைத்தும்.

இந்நூலை பெரு முயற்சியுடன் உருவாக்கித் தந்த பேரன்புக்குரிய **ஆலிம் கவிஞர் தேங்கை ஷறபுத்தீன்** மிஸ்பாஹி அவர்களுக்கும் அழகிய வடிவில் அரபி எழுத்துக்களையும் கண்கவரும் அட்டைப் பட ஓவியத்தையும் உருவாக்கித் தந்த **'ஸமீராஸ்'** அவர்களுக்கும், மற்ற நூல்களைப் போல் இந்த நூலையும் அழகிய முறையில் அச்சிட்டுத் தந்த **மாஹின் பிரிண்டர்ஸாருக்கும்**, எழுத்துக்களை கணிணி அச்சுக் கோர்வை செய்து தந்த **'மாஜி கிராஃபிக்ஸ்'** நிறுவனத் தாருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

எம்மையீன்றெடுத்த இனிய பெற்றோர்களுடையவும், உடன் பிறந்த சகோதரர் மற்றும் உற்றார், உறவினர் களுடையவும், எங்கள் பதிப்பகத்தின் தொடக்க காலத்தில் எங்களுக்குத் துணை நின்ற தூயவர், மௌலானா, மௌலவி மர்ஹூம் **M. அப்துல் ஃபத்தாஹ் ஜுஹூரி பாகவி** அவர்களு டையவும், இஸ்லாமிய எழுத்துத் துறையில் இணையற்ற முத்திரை பதித்த நல்லறிஞர், பன்னூலாசிரியர் மர்ஹூம் **M.R.M. அப்துர் ரஹீம்** அவர்களுடையவும் ஆன்ம நலனிற்காக எங்கள் பதிப்பகம் இந்நூலை அர்ப்பணிக்கிறது.

எங்களின் சுந்தரத் தமிழில் சுபுஹான மௌலிது, முத்தமிழ் மொழியில் முஹ்யித்தீன் மௌலிது ஆகிய நூல்களை அரவணைத்து ஊக்குவிக்கும் நேயர்களும், வாடிக்கையாளர்களும், விற்பனையாளர்களும் இந்நூலை யும் ஊக்குவிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம். வல்ல அல்லாஹ் வள்ளல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் பொருட்டால் ஈருலகிலும் நம் வாழ்வு ஏற்றம் பெற அருள்புரிவானாக! ஆமீன்.

**சுலைமானியா பப்ளிஷர்ஸ்**

*05.02.2001*
*சென்னை-1*

# வள்ளல்யா றசூலல்லாஹ் வருகை தாருங்கள்!

வருகை தாருங்கள்! வள்ளல்யா றசூலல்லாஹ்
வருகைதாருங்கள்!
ஏங்கும் காதல் நெஞ்சம் நெகிழ –
ஏழை எந்தன் கனவில் தாங்கள்
வருகை தாருங்கள்! வள்ளல்யா ஹபீபல்லாஹ்
வருகை தாருங்கள்!!

மன்னவரே! மண்ணில் தாங்கள் பிறந்ததினாலே – இந்த
**மண்**ணகமே **விண்**ணை விஞ்சும் பெருமை பெற்றதே!
**தண்ணீரும்** தன்னுடைய தாகம் தீர்க்கவே – என்றும்
தாவிவரத் தக்கசுனை தாங்கள் அல்லவா!
(வருகை...

**–2–**

ஏற்றம் மிக்க தங்கள் பார்வை பட்டுவிட்டாலே – கொடும்
எரி**நெருப்பும்** குளிர்ந்து பனியைப் போன்று உருகுமே!
**காற்று**க்கே மூச்சுத்திணறல் நேரிடுமென்றால் – அங்கே
கைகொடுக்கும் பிராணவாயுக் கலசம் தாங்களே!
(வருகை...

**–3–**

மெத்தபுகழ் தங்கள்பாத முத்தம் கிடைத்தால் – எந்தன்
**மெய்**சிலிர்த்துப் பேரின்பம் பொங்கி வழியுமே!

சத்தியத்தின் உறைவிடமாய் ஒளிரும் தங்களின் – உயர்
சலவாத்தாய் என்னுடைய இதயம் துடிக்குதே!
(வருகை...

**–4–**

உம்மிநபியே! தங்கள்பெயரை உச்சரித்தாலே – ஊறும்
உமிழ்நீரில் எந்தன் **வாயே** ஒலுவுச் செய்யுதே!

செம்பவள 'ஹூறுல் ஈன்' சிட்டுகள் பாடும் – தேன்
சிந்தினைப்போல் தங்கள்நாமம் **செவி**யில் பாயுதே!
(வருகை...

**கண்**ணொளியை வழங்கும் தங்கள் நாமம் ஓதியே – இரு
கண்களிலும் தடவும் விரல்கள் குளிர்ச்சி யூட்டுதே!

கண்ணியஞ்சேர் தங்கள்மேனி கமழச் செய்திடும் – உயர்
கஸ்தூரி வாசம் நுகர **மூக்கு** ஏங்குதே!
(வருகை...

(குறிப்பு: ஐம்புலன்களையும், பஞ்சபூதங்களையும் உள்ளடக்கிய இப்பாடல் – அண்ணல் நபிகளார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீது – ஆலிம் கவிஞர் தேங்கை ஷறபுத்தீன் மிஸ்பாஹி அவர்களால் இயற்றப்பட்டது.)

# கண்ணிய 'ரவ்ழா' முன்

-கசிந்த-

# கண்ணீர்த் துளிகள்!

**குறிப்பு :- (பூமான் நபி (ஸல்) அவர்களின் புனித ரவ்ழாவின் தரிசனப்பேற்றை நாடி, சுந்தரத் தமிழில் சுப்ஹான மவ்லிதை மொழி பெயர்த்த காரணத்தால் - அப்பேறு கடந்த 99ம் வருட ஹஜ்ஜின் போது கிடைத்த நேரத்தில் அண்ணலார் (ஸல்).அவர்களின் புண்ணிய ரவ்ழா முன் நின்று - ஆலிம் கவிஞர் அகமுருகிப் பாடிய கவிதை)**

**அர்ப்பணம்! அர்ப்பணம்! அர்ப்பணம்!**
**அண்ணலே நான், தங்களுக்கு அர்ப்பணம்!**
**அற்புதம் பொங்கிடும் தங்களின்**
**அடியவன் தங்களுக்கு அர்ப்பணம்!**

'நாடி வந்தேன், நாடிவந்தேன், நாதரே! – என்
நாடிநரம்பில் வாழும் இறைத் தூதரே!!
ஈடிலாத காதலோடு தங்களின்
ஏற்றமிகும் சன்னிதியில் நிற்கவே –
பாடியழுது கேட்ட விந்தப் பாவிமேல்,
பரிவுகொண்டு வாய்ப்பளித்த அண்ணலே
தேடிவந்து தேம்புகின்ற தொண்டனைத்
தேற்றத் தங்கள் திருவிழியால் நோக்குவீர்!
(அர்ப்பணம்)

'தனக்குத்தானே தீங்கிழைத்தோர் தங்கள் முன்
தாழ்மையுடன் நின்று, பிழை பொறுத்திட
தனக்குவமை இல்லானை வேண்டவே –
தாங்களவர் பிழைபொறுக்க இறையிடம்
மனமுவந்து கேட்டுவந்தால் இறைவனும்
மன்னிக்கும் கருணையாளன்', ஆவதாய் –
தினமோதும் மறைகூற்றுக் கேற்பவே –
தீபாவி தங்களின்முன் நிற்கிறேன்!
(அர்ப்பணம்)

விண்ணும் மண்ணும் வியந்துபோற்றும் வேந்தரே
விருந்தினராய் எம்மையேற்றுக் கொள்ளுவீர்!
உன்னதஞ்சேர் உங்களுயர் விருந்தினர்
உண்ணுகின்ற உணவுக்கிணை உள்ளதோ!
மன்னானின், முன்னர் மறுமை நாளிலே
மாசற்ற தங்களன்பைத் தவிர யான்,
என்ன அமல் கொண்டுவந்து காட்டுவேன்?
எம்மானே! எம்மைக்கரை யேற்றுவீர்!
(அர்ப்பணம்)

ஈன்ற தாயை விஞ்சும்அன்புப் பேழையே! – என்
எண்ணும் எழுத்தும் தங்களுக்கு அர்ப்பணம்!
வான்மறையைக் கொண்டுவந்த வள்ளலே! – என்
வாழ்வும் வளமும் தங்களுக்கு அர்ப்பணம்
பேணுகின்ற பேரருளின் புதையலே! – என்
பேச்சும் மூச்சும் தங்களுக்கு அர்ப்பணம்!
ஊணுறக்கம் அற்றஇறைத் தூதரே! – என்
உயிரும் உடலும் தங்களுக்கு அர்ப்பணம்!
(அர்ப்பணம்)

# 'பானத் சுஆத்' இயற்றிய கவிஞரும் இயற்றப்பட்ட சூழலும்!

## கவிக்குலத்தில் தோன்றிய கஃபு இப்னு ஸுஹைர் (ரலி)

'பானத் சுஆத்' எனும் நபி புகழ்ப் பாமாலை, கவியரசர் க∴பு இப்னு ஸுஹைர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களால் இயற்றப்பட்டது. இவரின் தந்தை ஸுஹைர் இப்னு அபீ சுல்மீ என்பவர் ஆவார். இவரின் தாயார் கப்ஷா பிந்த் அம்மார் ஆவார். அரபு நாட்டில் அந் நாளிலிருந்த 'முஸைனா' எனும் குலத்தில் இவர் பிறந்தார். இவரின் பாட்டன் 'ரபீஆ இப்னு ரிபாஹ்' என்பவருக்கு அபூ சுல்மீ' என்று புனைபெயர் இருப்பதால், இவரின் தந்தை 'ஸுஹைர் இப்னு அபீ சுல்மீ' என்று அழைக்கப் பட்டிருந்தார்.

இவரின் தந்தை ஸுஹைரும் புகழ்மிக்க பெருங்கவிஞராக இருந்தார். அக்காலத்தில் அரபு மண்ணில் ஒரு பகுதியை ஆண்ட குறுநில மன்னன் ஆகிய 'ஹரிம்' என்பவனின் அவைக்களப் புலவனாக க∴பின் தந்தை ஸுஹைர் பொறுப்பிலிருந்து, அந்த மன்னனைப் போற்றிப் புகழ்ந்து கவிதைகள் பல இயற்றினார். இதனால் அந்த மன்னனால் ஏராளமான பொன்னும் பொருளும் பரிசிலாக வழங்கப் பெற்று வளவாழ்வு வாழ்ந்தார். ஸுஹைரின் இந்தச் சூழலைத்தான் இமாம் பூஸிரி (ரஹ்மத் துல்லாஹி அலைஹி) அவர்கள் தன் புர்தா ஷரீபின் 151 - வது பாடலில் 'ஹரிம் எனும் அரசனைப் புகழ்ந்து பாடியதால் கவிஞர் ஸுஹைரின் இரு கரங்களும் கிள்ளிய - பூவுலகச் செல்வங்களெனும் பூக்களை யான் பறிக்க நாடிப் பூமான் நபிகளைப் போற்றவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

இத்தகைய புகழ்மிக்க கவிஞர் ஸுஹைரின் மூன்றாவது புதல்வர்தான் கவியரசர் க∴பு ஆவார். இந்தக் கவிஞர் க∴பின் 'முஸைனா' எனும் குலம், கவிஞர்கள் மிகுந்த ஒரு குலமாக விளங்கியது. எனவே தான் க∴பின் தந்தை ஒரு பெருங்கவிஞர். அவரின் பாட்டன் அபூ சுல்மீ ஒரு கவிஞர். இவரின் தந்தையின் மாமன் ஒரு கவிஞர். இவரின் மாமியர்களான 'கன்ஸா' 'ஸல்மா' ஆகியோர் பெண்பாற் கவிஞர்கள். இவரின் அண்ணன் புஜைர் ஒரு கவிஞர். இவரின்

புதல்வன் உக்பா ஒரு கவிஞர். இவரின் பேரன் அவ்வாம் ஒரு கவிஞர் என்றமைந்தனர்.

கவிஞர் க.்.பு சிறுவராக இருந்த போதே சில கவிதைகளை இயற்றினார். இதையறிந்த தந்தை சினங்கொண்டு மகனை அடித்து விட்டார். 'தன் மகனின் கவிதை தரமற்றதாயின் தன் குலத்துக்கே இழுக்காகி விடுமோ' என்று அஞ்சி தன் மகனை முதலில் அடித்து, மகனின் கவிதைகளுக்குத் தடைபோட்ட தந்தை நாளடைவில் மகனின் திறனைக் கண்டு வியந்து கவிதை இயற்றிட மகனுக்கு அனுமதி வழங்கினார். 'தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும்' என்ற பழிமொழிக்கேற்ப பின்னர் கவியரசர் க.்.பு தன்னுடைய தந்தையையே விஞ்சுமளவிற்குத் தனிப்பெரும் கவிஞராகி விட்டார்.

## மக்கா வெற்றியும் கவிஞர்களின் மனக் கலக்கமும்

பூமான் நபி (ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம்) அவர்களால், புனித இஸ்லாம் எனும் பொன்னொளி அரபகத்தில் பரவத் தொடங்கிய போது - இஸ்லாமியத் திருநெறியை ஏளனம் செய்து கவிதை இயற்றிய கவிஞர்களில் ஒருவராக கவிஞர் க.்.பு இருந்தார். இப்னு ஸப்அரி, ஹுபைறத் இப்னு அபீ வஹப் போன்ற கவிஞர்கள், க.்.புடன் சேர்ந்து கருணை நபிகளாரை விமர்சித்த கவிஞர்கள் ஆவர். இந்நிலையில் ஹிஜ்ரீ 8-ம் ஆண்டு எம்பெருமானார் (ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம்) அவர்கள் தாயிபிலிருந்து மதீனாவுக்குத் திரும்பி வந்தபோது - கவிஞர் க.்.பு முஸ்லிமாகிய நிகழ்ச்சி நடைபெற்றது.

வரலாற்றுப் புகழ்மிக்க மக்கா வெற்றி மாநபிகளாருக்குக் கிடைத்தபோது எதிரிகளின் கொட்டம் அடங்கியது. வாளாயுதம் ஏந்திய எதிர் தரப்பு வீரர்களைப் போல் நாவாயுதம் ஏந்திய கவிஞர்களும் மக்காவை விட்டு அஞ்சியோடினர். இப்னு ஸப்அரீ, ஹுபைறத் இப்னு அபீ வஹப், புஜைர் இப்னு ஸுஹைர், க.்.பு இப்னு ஸுஹைர் போன்ற கவிஞர்கள், அஞ்சி ஓடியோருள் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவர். கவிஞர் க.்.பும் அவரின் அண்ணன் புஜைரும் மக்காவை விட்டுத் தப்பியோடி 'அப்றகுல் அஸ்ஸா.்.ப்' - என்ற இடத்திற்குச் சென்று

தலைமறைவாயினர். இந்நிலையில் ஒருநாள் புஜைர் - தன் தம்பி க:.பை நோக்கி, 'நீ இங்கேயே இரு! நான் நபிகளாரிடம் சென்று அங்குள்ள நிலவரங்களைத் தெரிந்து வருகிறேன். அவர்களின் புதிய போதனை யென்ன என்பதைக் கேட்டு வருகிறேன்!' எனக் கூறிவிட்டு மதினா நோக்கிச் சென்றார்.

## கவின்மிகு இஸ்லாமைத் தழுவிய கஃபின் சகோதரர்

மதினாவுக்குச் சென்றவர், மாநபிகளாரின் மணிமொழி களால் ஈர்க்கப்பட்டு இனிய இஸ்லாமிய நெறியை ஏற்றார். புஜைர் இஸ்லாமிய நெறியேற்கக் காரணம், இவர்களின் தந்தையான கவிஞர் ஸுஹைர் அவர்கள் ஒரு கனவு கண்டதின் அடிப்படையில் தன் பிள்ளைகளுக்கு எடுத்துரைத்த இறுதி அறிவுரை (வஸிய்யத்) ஆகும். ஸுஹைர் தன் கனவில் - வானிலிருந்து ஒரு ஏணி தன்னை நோக்கி நெருங்கி வருவதாகவும், அதைப் பிடிக்க ஸுஹைர் முயன்றபோது அந்த ஏணி இவரின் பிடிக்கு எட்டாமல் நகர்ந்து கொண்டே போவதாகவும் கண்டார். இறுதிக் காலத்தில் அனுப்பப்படும் திருத்தூதர்தான் அந்த ஏணியென்றும் அன்னாரைத் தரிசிக்கும் பேறு தனக்குக் கிடைக்காது என்றும் தன் கனவுக்கு விளக்கத்தை உணர்ந்து கொண்ட கவிஞர் ஸுஹைர், தன்னுடைய கனவைக் குறித்துப் பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்லி, அந்தத் திருத்தூதரை சந்திக்க நேரிட்டால் அவர்களை ஏற்று முஸ்லிமாகி விடுங்கள் என்றும் போதித்தார்.

## கஃபு - தன் சகோதரருக்கு எழுதிய கண்டனக் கவிதை

எனவே, ஏந்தல் நபிகளாரை நேரில் கண்டு, நெருங்கியபோது நெகிழ்ந்துவிட்ட புஜைர், முஸ்லிமாகி விட்ட தகவல், அவரின் தம்பி க:.புக்குத் தெரிய வந்தபோது கவிஞர் க:.பு சினம் கொண்டார். புஜைருக்கு ஒரு கவிதையை எழுதிய மடலை அனுப்பி வைத்தார், க:.பு. அக் கவிதை மடலில் க:.பு குறிப்பிட்டார்,

'புஜைரே! உனக்குக் கேடு நிகழ்ந்தது! நீ கூறிய ஏகத்துவ மொழியில் (கலிமா) உனக்கு உள்நோக்கம் எதுவுமுண்டோ? 'நம்பப்பட்டவர்' (நபிகளார்) ஏகத்துவ மொழியினால் ஒரு முறையோ இரு முறையோ உனக்கு மதுவைப் புகட்டி விட்டார். எனவே நீ, அன்னாரைப் பின்பற்றியதால் நம் முன்னோர்கள் காட்டிய நேர்வழியை

விட்டுப் பிரிந்துவிட்டாய்! பிறரின் கேட்டினை நீயும் பெற்றுவிட்டாயோ?' அந்தப் புது வழி, உனக்கு எதைத் தான் அறிவித்ததோ? உன் தாயும் தந்தையும் தம்பியும் தழுவாத நெறியை - அறியாத வழியை - நீ அடைந்து விட்டாயே! நீ, அந்த வழியை உதறி விட்டுத் திரும்ப வில்லையென்றால், உனக்கேற்படும் இன்னல் குறித்து யான் கவலைப்பட மாட்டேன். உன் அல்லல்களுக்காக ஆறுதல் மொழியும் கூற மாட்டேன்!'

**கஃபின் சிரசைச் சீவிட உத்தமநபி பிறப்பித்த உத்தரவு**

இவ்வாறு பொருளமைந்த கவிதை மடலைப் பெற்ற புஜைர், தம்பி க்ஃபு மீது ஆத்திரமுற்றதுடன் அம் மடலை அண்ணல் நபிகளாரிடம் படித்துக் காட்டினார். உடனே நபியவர்கள் தன் தோழர்களைப் பார்த்து, 'உங்களில் எவராவது க்ஃபு இப்னு ஸுஹைறை சந்திக்க நேரிட்டால் உடனே அவரைக் கொன்று விட வேண்டும்' (மன்லகிய மின்கும் க்ஃப் பின் ஸுஹைரின் ஃபல்யக்துல்ஹு) என்று, ஆணை பிறப்பித்தார்கள்.

எனவே, புஜைர் அவர்கள் தன் தம்பி, க்ஃபுக்குக் கவிதையிலேயே ஒரு மறுமடல் தீட்டினார்கள். அம்மட்லில் புஜைர் குறிப்பிட்டதாவது:

'வலிமை மிக்க நிலையிலுள்ள வாய்மைத் திருமொழியான கலிமாவைப் பொய்யான முறையில் பழித்துரைக்கும் உன்னுடைய உள்நோக்கம் என்ன? அல்லாஹ் ஒருவனை நோக்கி மட்டுமே நீ மீளுவாயாக! 'லாத் - உஸ்ஸா' எனும் கற்சிலைகளை நோக்கி மீளாதே! இணை வைத்தல் என்ற அசுத்தம்படாத தூய உள்ளம் பெற்ற முஸ்லிமைத் தவிர, வேறு மனிதர்கள் எவரும் ஈடேற்றமும் பாதுகாப்பும் பெறாத நாளின்போது உனக்கு பாதுகாப்பும் ஈடேற்றமும் வேண்டுமெனில் அல்லாஹ்வை நோக்கி மட்டுமே நீ மீளவேண்டும்! எனவே, நம் தந்தை ஸுஹைரின் மார்க்கமும், பாட்டன் அபூ சுல்மியின் மார்க்கமும் எந்தப் பயனுமற்ற மார்க்கமாதலால், அது எனக்கு விலக்கப்பட்ட மார்க்கமாகும்!'

இவ்வாறு, தன் தம்பிக்குக் கவிதையில் மறுமடல் தீட்டிய புஜைர், அம்மடலின் கீழ் எழுதிய குறிப்பில் - 'தம்பி, உன் உதிரத்தைப் பழிக்குப் பழியில்லாமல் ஓடச் செய்ய உம்மி நபிகளார் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். அன்னாரின்

பொன் மனத்தைப் புண்படச் செய்து வசை கவிபாடிய பல்வேறு கவிஞர்களைக் கொலை செய்ய ஆணை பிறப்பித்துள்ளார்கள். இப்னு ஸப·ரி, ஹு'பைறத் இப்னு அபீ வஹப் போன்ற - எஞ்சிய குறைஷிக் கவிஞர்கள் மக்காவை விட்டே ஆளுக்கொரு திசையில் ஓடி ஒளிந்துள்ளனர். 'இந்நிலையில், நீ உயிர் தப்புவாய், என்று யான் நம்பவில்லை. எனவே, உன்னுயிர் உனக்குத் தேவையானால் நபிகளாரிடம் வந்து சரணடைந்து விடு! ஏனெனில், பாவமன்னிப்புக் கோரிய நிலையில் தன்னிடம் வருவோரை நபியவர்கள் ஒப்புக் கொள்வார்கள். இஸ்லாமிய நெறியை ஏற்பதற்கு முன்னர் செய்துவிட்ட தவறுகளுக்காக நபியவர்கள் பரிகாரம் தேடமாட்டார்கள்!' - என்று எழுதினார்கள்.

## மாநபிகளார் முன்னிலையில் மனந்திருந்திய கஃபு

புஜைரின் மறுமடலைப் பெற்ற க·பு அவர்கள், நபிகளாரின் தண்டனையிலிருந்து தன்னைக் காப்பாற்றுமாறு கோரி, தன்னுடைய முஸைனா குலத்தாரிடம் வந்தார். அக்குலத்தார் அதற்கு மறுக்கவே கவிஞர் க·புக்கு இந்தப் பூமியே நெருக்கடியாகத் தோன்றியது. அவர் தன் உயிருக்கு அஞ்சினார். அவருடைய எதிரிகள் அவரை மிரட்டி, நீ கொலை செய்யப்படுவாய்!' என்றனர்.

இந்நிலையில், கவிஞர் க·பின் மனம் மாறியது. 'குப்ர்' எனும் காரிருள் கவ்விய க·பின் நெஞ்சில், இஸ்லாமெனும் கதிரவன் தன் ஒளிக்கதிர்களைப் பாய்ச்சத் தொடங்கியது. எனவே அவர் மதினா மாநகர் நோக்கி வந்து, தனக்கு ஏற்கனவே அறிமுகமாகயிருந்த 'ஜு'ஹைனா' குலத்து மனிதர் ஒருவரின் வீட்டில் வந்து இறங்கினார். எனவே, அவர் க·பை மஸ்ஜிதுன் னபவிய்யி நோக்கி அழைத்து வந்தார். பின்னர் நபிகளாரைச் சுட்டிக் காட்டி, 'இவர்கள் தான், அல்லாஹ்வின் திருத்தூதர் ஆவார்கள். எனவே, இவர்களின் முன், நின்று, அவர்களிடம் பாதுகாப்புத் தேடு!' என்றார்.

அந்நேரம் அண்ணலாரைச் சுற்றி அருமைத் தோழர்கள், உணவு விரிப்பைச் சுற்றி வட்டமாக அமர்வது போல் ஒருவர் பின் ஒருவராகப் பல்வேறு வட்டங்களாக அமர்ந்திருந்தனர். இந்நிலையில், மாநபிகளின் முன்னிலையில் அடக்கத்துடன் வந்து நின்ற கவிஞர் க·பு, நபிகளாருக்கு முன், மண்டியிட்டு அமர்ந்து, அவர்களின்

பொற்கரத்தைப் பற்றி விட்டு, 'அல்லாஹ்வின் திருத்தூதரே! கவிஞர் க.்.பு இப்னு ஸுஹைரை நான் அழைத்துக் கொண்டு உங்கள் முன்னர் வந்தால் - அவர் பாவமன்னிப்புக் கோரி முஸ்லிமான நிலையில் தங்கள் முன் நிற்கும்போது - அவரைத் தாங்கள் ஒப்புக் கொள்வீர்களா?' என்று கேட்டார்.

அதற்கு நபியவர்கள், 'ஆம்!' என்றவுடன், 'அல்லாஹ்வின் திருத்தூதரே! நான் தான் க.்.பு இபனு ஸுஹைர்' என்றார். க.்.பு, இவ்வாறு தன்னை அடையாளம் காட்டியதும் சபையில் சற்று சலசலப்பு ஏற்பட்டது. இவர் முன்னர் தன்னுடைய அண்ணன் புஜைருக்கு எழுதிய கவிதை மடலில் இடம் பெற்றிருந்த - 'நம்பப்பட்டவர் (நபிகளார்) உனக்கு ஏகத்துவக் கலிமா எனும் மதுவைப் புகட்டினார்'- என்ற வரி குறித்து சிறிது விவாதம் எழுந்தது. அந்நேரம் 'அன்ஸாரி'த் தோழர்களில் (மதீனாவின் தோழர்கள்) ஒருவர் க.்பை நோக்கிச் சீறிப் பாய்ந்து, 'அல்லாஹ்வின் திருத்தூதரே! அல்லாஹ்வின் இந்த எதிரியையும் என்னையும் விட்டு விடுங்கள்! இவரின் கழுத்தை யான் வெட்டு கிறேன்' **(யா ரசூலல்லாஹ்! தஃனீ வஅதுவ்வல்லாஹி அழ்ரிபு உனுகஹு)** என்று முழங்கினார். அப்போது அண்ணலார், அந்தத் தோழரைத் தடுத்து, 'இவரை விட்டு விடுங்கள்! இவர், கு.்ப்ரை விட்டு வெளியேறிய நிலையில், பாவமன்னிப்புக் கோரிய வராக நம்மிடம் வந்து விட்டார்' **(தஃஹு அன்க ஃபகத் ஜாஅனா தாயிபன் நாஸிஆ)** என்றுரைத்தார்கள்.

## கருணை நபிகளாரின் பொன்னாடை பெற்ற கவியரசர் கஃபு

அந்நேரம், தன் முந்தைய தவறுக்கு வருந்திய கவிஞர் க.்.பின் உள்ளம் உருகியது. 'பானத் சுஆது' எனத் தொடங்கிய கவிதை வெள்ளம், அவரின் உதடுகளிலிருந்து ஆறாகப் பெருகியது. பெருகிய கவிதை வெள்ளத்தைப் பெருமான் நபிகளார், - தோழர்கள் புடைசூழ அமர்ந்த வண்ணம் - தன் செவிகளால் பருகினார்கள்.

'உறையிலிருந்து உருவப்பட்ட அல்லாஹ்வின் வாட்களுக்கிடையில், ஏந்தல் நபிகளார், இந்தியத் திருநாட்டு வாளினைப்போல் இலங்குகிறார்கள்' - எனும் பொருள் கொண்ட

**–'இன்னர் ரசூல லஸய் ஃபுன்யுஸ்த ழாஉபிஹி**
**முஹன்னதுன் மின்ஸுயூ ஃபில்லாஹி மஸ்லூலு'**

என்ற 52-ம் கண்ணியைக் கவியரசர் க.்.பு அவர்கள் பாடக்கேட்டதும், எம்பெருமானார் (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தன் பொன் மேனியில் தவழ்ந்த மேலாடையைக் கவிஞர் க.்.புக்குப் பொன்னாடையாகப் போர்த்தினார்கள். 'அந்தப் பொன்னாடையை எனக்கு வழங்கினால், பத்தாயிரம் திர்ஹம்கள் தருகிறேன்! - என்று ஹஜ்ரத் முஆவியா (ரலியல்லாஹு அன்ஹு) கவிஞர் க.்.பிடம் வேண்டிய போது, அவர் 'அல்லாஹ்வின் திருத்தூதரின் ஆடைக்குப் பதிலாக யான் உலகில் எவரையும் - எந்தப் பொருளையும் - தேர்வு செய்ய மாட்டேன் என்று மறுத்துரைத்தார்கள். எனவே, க.்.பின் மறைவுக்குப் பிறகு, அவரின் வாரிசுகளுக்கு இருபதாயிரம் திர்ஹம்கள் அன்பளிப்பாகக் கொடுத்து அந்தப் பொன்னாடையை முஆவியா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் வாங்கி அரசுடைமை ஆக்கினார்கள். அந்தப் பொன்னாடை துருக்கியின் தலைநகர் இஸ்தன்பூலில் உள்ள "மஸ்ஜிது கிர்காஹ் ஷரீ.்.ப்" (புனிதப் போர்வை பள்ளிவாசல்) என்ற பள்ளிவசாலில் இன்றுவரை பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது.

**'பானத் சுஆதுப்' பாமாலை புனிதக் கவிதையே!**

கவிஞர் க.்.பு அவர்கள், மாநபி நாதரின் முன்னிலையில் 'பானத் சுஆது' பாமாலையைப் பாடி, அன்னாரைப் போற்றியபோது, இப்பாமாலையின் இறுதியிலுள்ள 59 -ம் கண்ணி, பாடப்பட்டபோது, தாஹா நபிகளார், தன் சன்னிதானத்திலிருந்த குறைஷி குலத் தோழர்களை நோக்கி, 'இந்த கண்ணியை நன்கு கவனியுங்கள்!' என்று தன்னுடைய முகப் பாவனையால் உணர்த்திக் காட்டினார்கள். எனவே, இந்தப் பாமாலையைக் கேட்பது, நபிவழியைச் சார்ந்த விரும்பத்தக்கச் செயலாக - 'முஸ்த்தஹப்'பாக - கணிக்கப்படுகிறது.

பானத் சுஆதின் முதல் 38 கண்ணிகள், கன்னியொருத்தியின் மீது காளையொருவன் கொண்ட காதலை வருணிப்பதைப்போல வடிக்கப்பட்டிருந் தாலும் கூட - இவை அண்ணலாரின் அருட்சன்னிதா னத்தில் பாடப்பட்டமையாலும், அவர்கள் போர்த்திய பொன்னாடை மூலம் - அவர்களின் அங்கீகாரத்தைப் பெற்றமையாலும், இப்பாமாலை முற்றிலும் புனிதமானவை -'பரக்கத்' மிக்கவை என்பதில் இம்மியும் ஐயமில்லை.

# பானத் சுஆத் – ஒரு கண்ணோட்டம்!

கவிஞர்கள், தம் கருத்தில் நிறைந்த காவிய நாயகருக்குப் புகழ்ப் பாமாலை தொடுக்கும்போது - அதை 'தஷ்பீப்' என்ற காதல் கவிதையிலிருந்து தொடங்குவது அன்றைய அரபி இலக்கிய மரபாகும். பெரும்பான்மையான அரபிக் கவிஞர்கள் பின்பற்றி வந்த இந்த மரபை, 'பானத் சுஆத்' இயற்றிய கவியரசர் கஃபு அவர்கள் தன் கவிதையில் பின்பற்றியுள்ளார்கள். இத்தகைய காதல் கவிதை நான்கு வகையாகப் பிரியும். 'காதலியை அடைவேனோ?' என்று கவலைப்படுதல்; காதல் நோய்க்கு ஆளாகுதல், காதலால் கட்டுண்டு நிற்பது, காதலியின் ஈர்ப்பிலும் இனிய நினைவுகளிலும் தோய்வது போன்றவற்றை உரைத்தல் காதல் கவிதையின் முதல் வகையாகும்.

காதலுக்குக் காரணமாக அமைந்த காதலியின் கட்டழகு, கனிமொழி, கனிவார்ந்த குணங்கள் போன்றவற்றை எடுத்துரைத்தல் 2 -வது வகையாகும். காதலனுக்கும் காதலிக்குமிடையே இணைந்து காணப்படும் ஊடல், கூடல், கடிதல், சாக்குப் போக்குக் கூறல், வாக்களித்தல், அளித்த வாக்குக்கு மாறுசெய்தல் முதலியவற்றைக் கூறுவது 3 -வது வகையாகும். காதலைப் பழித்துரைப்போர், காதலைக் கெடுத்திடக் கோள்மூட்டுவோர் போன்றோரின் நிலைகளை நவிலுவது 4 -வது வகையாகும். இவ்வாறு பிரியும், காதல் காவியத்தின் நான்கு கூறுகளும் பானத் சுஆதில் இடம்பெற்றுள்ளன.

பானத் சுஆதுப் பாமாலையைக் கீழ்க் கண்டவாறு, வகை பிரிக்கலாம். இப்பாமாலையின் முதற்கண்ணி, காதல் காவியத்தின் நான்கு கூறுகளில் முதல் வகையாகிய - காதலனின் கவலை தோய்ந்த மனநிலையை உணர்த்துகிறது. இதன் 2-வது கண்ணி, காதல் காவியத்தின் 2-வது வகையைக் கூறத் தொடங்குகிறது. எனவே, 2-வது கண்ணியில், இனிய ஒலி எழுப்பும் எழில்மிகு மானுக்கு உவமையாக காதலி காட்டப் பட்டிருக்கிறாள். 3-வது கண்ணி அவளின் கட்டான மேனியின் முன்னழகையும் பின்னழகையும் பகர்கிறது. 4-வது கண்ணி, அவளின் மோகனப் புன்னகையைக் குறிப்பிட்டு, அவளின் முத்துப் பற்களிடையே ஊறும் உமிழ் நீரை மதுவுடன் ஒப்பிடுகிறது. 5-வது

கண்ணியும் 6-வது கண்ணியும், அந்த மது - கலக்கப்பட்ட தண்ணீரையும், அந்தத் தண்ணீர் எடுக்கப்பட்ட தடாகத்தையும் வருணிக்கிறது.

7-வது கண்ணி - காதல் காவியத்தின் 3-வது வகையைக் கூறத் தொடங்குகிறது. எனவே இக்கண்ணி, வாக்குறுதிக்கு காதலி மாறு செய்வதையும் அறிவுரைகளை அவள் செவியேற்கா மலிருப்பதையும் குறிப்பிடுகிறது. 8 -வது கண்ணியும் 9 -வது கண்ணியும் காதலி - பொய்யுரைத்தல், தன் காதலனின் மனத்தைப் புண்பட வைத்தல், காதலில் அவள் உறுதியாக இல்லாமல் தடுமாறுதல் போன்ற இயல்புகளைப் பெற்றிருப்பதாகக் கூறுகிறது. 10 முதல் 13 வரையுள்ள கண்ணிகள் - காதலி சுஆதின் வாக்கு மீறலைக் குறிப்பிட்டு விட்டு, காதலன் அவள்மீது கொண்ட காதல், 'ஒரு தலை ராகமாக இல்லாமல் உயர் வெற்றி பெற்றதாக அமைய வேண்டுமே!' என்ற காதல்னின் ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறது. 14 -வது கண்ணி - காதலி சுஆது நெடுந் தொலைவில் இருப்பதாகவும், அவளிருக்கு மிடத்தையடைய துரித நடைமிக்க ஒரு ஒட்டகை, காதலனுக்குத் தேவையென்று குறிப்பிடுகிறது. 15 முதல் 34 வரையுள்ள 20 கண்ணிகள் - சுஆது இருக்குமிடத்தை காதலன் அடையத் துணை நிற்கும் ஒட்டகையை வருணிக்கின்றன.

35 -வது கண்ணி - காதல் காவியத்தின் 4 -வது வகையைக் கூறத் தொடங்குகிறது. 35 முதல் 38 வரையுள்ள 4 கண்ணிகள் - காதலைக் கெடுத்திடக் கோள்மூட்டுவோர் களின் முனைப்புகளையும், உற்ற நண்பர்களெனக் காதலனால் கருதப்பட்டவர்கள் கூட, அவனுடைய காதல் வெற்றிக்குக் கைகொடுக்காமல் அவரவர் போக்கில் செல்வதையும், இதனால் மனமுடைந்த காதலன்- 'அடைந்தால் காதல்! இல்லை யென்றால் சாதல்!' - என்ற முடிவுக்கு வந்து விட்டதையும் குறிப்பிடுகின்றன.

இவ்வாறு 38 கண்ணிகள் - 'தஷ்பீப்' எனப்படும் காதல் காவியமாகத் தொடக்கத்தில் அமைந் துள்ளன. 39 -வது, கண்ணியிலிருந்து - 'பானத் சுஆது பாமாலை பாடப்பட்ட நோக்கம் பளிச்சிடுகிறது. கவியரசர் கஃபு (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள், தன்னுடைய கண்ணின் மணியாக ஏற்றுக் கருத்தினில் பொருந்திக் கொண்ட கருணை நபிகளார்

(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் கண்ணியத்தையும், கம்பீரத்தையும் 39 -ம் கண்ணியிலிருந்து 52 -ம் கண்ணி வரையுள்ள 14 கண்ணிகள் வருணிக்கின்றன. இந்த 14 கண்ணிதான் பானத் சுஆதுப் பாமாலையின் அடிப்படையான ஆணிவேராகும். 53 -வது கண்ணியி லிருந்து 59-வது கண்ணிவரையுள்ள 7 கண்ணிகள் 'பூவோடு சேர்ந்து நாரும் மணக்கும்' என்பதற்கொப்ப பூமான் நபிகளோடு சேர்ந்து புனிதம் பெற்ற ஸஹாபிகளான நாயகத் தோழர்களின் வீறு நடையையும் வீரத்தையும் வருணிக்கின்றன. இந்த ஏழு கண்ணிகள் பானத் சுஆதுப் பாமாலையின் முடிவுரையாக அமைந்துள்ளன. இறுதியில் இடம்பெற்ற 60, 61, 62 ஆகிய மூன்று கண்ணிகள் பானத் சுஆதில் பின்னர் இணைக்கப்பட்ட பிற்சேர்க்கையாகும்.

முதல் கண்ணியில் 'பானத்' என்ற சொல்லைக் கொண்டு தன் கவிதையைத் தொடங்கிய கவிஞர் க.்.பு அவர்கள் தான் பாடிய இறுதிக் கண்ணியான 59 -வது கண்ணியை 'ஹியாமுல் மவ்த்தி' என்ற சொல்லினால் முடித்திருக்கிறார். ஏனெனில் அன்றைய அரபி இலக்கிய மரபுப்படி, - ஒரு கவிஞர் தன் கவிதையை எந்தச் சொல்லினால் தொடங்கினாரோ அந்தச் சொல்லின் பொருளுக்குப் பொருத்தமான இன்னொரு சொல்லினால் அக்கவிதையை முடித்திருந்தால் அக் கவிதை இலக்கியத் தரம் வாய்ந்ததாகக் கருதப்பட்டது. எனவே, 'பிரிந்துவிட்டாள்' (பானத்) எனும் பொருள் தரும் சொல்லினால் தன் கவிதையைத் தொடங்கிய கவிஞர் க.்.பு அவர்கள் - 'மரணத்தின் சங்கமத்தலம்' (ஹியாமுல் மவ்த்தி) எனும் பொருள் தரும் சொல்லினால் தன் கவிதையை முடித்திருக்கிறார். 'பிரிவு' என்ற சொல்லின் பொருளும் 'மரணம்' என்ற சொல்லின் பொருளும் காதல் உலகில் ஒன்றுக்கொன்று பொருத்தமானது தானே!

பானத் சுஆதின் சில பிரதிகளில் - இப்பா மாலையின் 'ஹய்.்.பாஅ' எனத் தொடங்கும் 3 -வது கண்ணியும், '்.பகத் அத்தைய்து' எனத் தொடங்கும் 40-வது கண்ணியும் காணப்படவில்லை. இமாம் அப்தில்லாஹ் இப்னு ஹிஷாமுல் அன்சாரி அவர்களும், அஷ்ஷெய்க் இப்றாஹீமுல் பாஜுரி அவர்களும், தத்தம் விரிவுரைகளில் இவ்விரு கண்ணிகளையும் இடம்பெறச் செய்யவில்லை.

# بَانَتْ سُعَادُ

بَانَتْ سُعَادُ فَقَلْبِي الْيَوْمَ مَتْبُولُ
مُتَيَّمٌ إِثْرَهَا لَمْ يُفْدَ مَكْبُولُ ①

1. என் இனிய காதலி 'சுஆது' என்னை விட்டுப் பிரிந்து சென்று விட்டாளே! எனவே, என்னிதயம் இன்றைய தினம் காதல் நோயினால் பாதிக்கப் பட்டுள்ளது.

அவளுடைய பிரிவுக்குப் பின் என்னிதயம், அவளின் நினைவுகளுக்கு அடிமையாக ஆக்கப்பட்டுள்ளது. பிரிவுத் துயர் எனும் கட்டுக்குள் அகப்பட்ட என்னிதயம் விடுவிக்கப்படவில்லை.

وَمَا سُعَادُ غَدَاةَ الْبَيْنِ إِذْ رَحَلَتْ
إِلَّا أَغَنُّ غَضِيضُ الطَّرْفِ مَكْحُولُ ②

2. சுஆத் (என்னை விட்டுப்) பிரிந்த (நாள்) காலைப் போதில் அவள் பயணம் புறப்பட்டபோது - கண்ணுக்கு மை தீட்டப்பட்ட - (நாணத்தால்) விழிகள் (நிலம் நோக்கித்) தாழ்த்தப்பட்ட - மெல்லிசை யெழுப்பும் - மானைப் போன்று இருந்தாள்.

هَيْفَاءُ مُقْبِلَةً عَجْزَاءُ مُدْبِرَةً
لَا يُشْتَكَى قِصَرٌ مِنْهَا وَلَا طُولُ ٣

3. அன்று அவள், முன்னோக்கி வரும் நிலையில் வயிறு ஒட்டிய மெல்லிடையாளாகவும், திரும்பிச் செல்லும் நிலையில் பின்னழகு மிகுந்தவளாகவும் காணப்பட்டாள். அவளிடத்தில் 'குட்டை' 'நெட்டை' எனும் குறைபாடுகள் எதுவும் இருந்ததாகப் புகார் கூறப்படவில்லை.

تَجْلُو عَوَارِضَ ذِي ظَلْمٍ إِذَا ابْتَسَمَتْ
كَأَنَّهُ مُنْهَلٌ بِالرَّاحِ مَعْلُولُ ٤

4. அன்று அவள் புன்னகைத்தபோது ஈரப்பற்களைக் காட்டினாள். அந்த ஈரம், இரண்டாம் முறை மதுவை அருந்தியதால் ஏற்பட்ட ஈரம் போலிருந்தது.

(குறிப்பு: காதலியின் உமிழ் நீரை – 'பாலொடு தேன் கலந்தற்றே!' என்று தமிழர் மரபுக்கேற்ப வள்ளுவர் வருணிக்கிறார். அன்றைய அரபி இலக்கிய மரபுக்கேற்ப அந்த உமிழ் நீர், இங்கு, கவிஞர் கஃபினால் மதுவுடன் ஒப்பிடப்பட்டுள்ளது. 'புனித இஸ்லாத்தைத் தழுவிய புதுவேகத்தில் பொங்கி வந்த கவிதையிது' என்பதால், தன் பழைய மரபின் பழக்கத்தைக் கவிஞர் கஃபு தன் கவிதையில் கடை பிடித்துள்ளார். எனவே எம்பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் கவிஞர் கஃபை – இந்த உவமையைக் கையாண்டதற்காகக்

கண்டிக்க வில்லை. ஆகவே, 'விலக்கப்பட்ட மது, எவ்வாறு வேந்தர் நபி முன் பாடப்பட்ட பாமாலையில் உவமையாகப் பயன்படுத்தப்பட்டது? என்ற வினாவிற்கே இடமில்லை.)

شُجَّتْ بِذِيْ شَبَمٍ مِّنْ مَّآءِ مَحْنِيَةٍ

٥ صَافٍ بِاَبْطَحَ اَضْحٰى وَهُوَ مَشْمُوْلُ

5. வைகறைப் போதில் - வாடைக் காற்று தவழ்ந்த நிலையில் - இலங்கும் சரளைக் கற்கள் மிகுந்த அகன்ற நீரோடையில் - மலையடிவாரத் திலிருந்து விழுந்த - மிகவும் தெளிந்த - குளிர் மிகுந்த தண்ணீருடன் (சுஆது குடித்த) மது கலக்கப் பட்டிருந்தது.

تَنْفِى الرِّيَاحُ الْقَذٰى عَنْهُ وَاَفْرَطَهٗ

٦ مِنْ صَوْبِ سَارِيَةٍ بِيْضٌ يَّعَالِيْلُ

6. அந்த நீரோடையிலுள்ள கசடுகளை யெல்லாம் அங்கே வீசுகின்ற காற்று, அப்புறப்படுத்தி விடுகிறது. இரவில் உலாவரும் மேகத்திலிருந்து பொழியும் மழை நீரினால் - அந்த நீரோடையை வெள்ளிப் பனிமலைகள் நிரப்பி விடுகின்றன.

اَكْرِمْ بِهَا خُلَّةً لَّوْ اَنَّهَا صَدَقَتْ

٧ مَوْعُوْدَهَا اَوْلَاَنَّ النُّصْحَ مَقْبُوْلُ

7. தோழமை விஷயத்தில் சுஆதுக்குரிய மகத்துவம்தான் என்ன! ஆனால், அவள் தன் வாக்குறுதியில் உண்மையைக் கூறி, அறிவுரைகளை ஏற்பவளாக இருந்தால் அவளின் தோழமைத் தொடர்பு இன்னும் முழுமையாக இருந்திருக்குமே!

لَكِنَّهَا خُلَّةٌ قَدْ سِيطَ مِنْ دَمِهَا

فَجْعٌ وَوَلْعٌ وَإِخْلَافٌ وَتَبْدِيلُ ٨

8. நிச்சயமாக சுஆத் என் தோழிதான். (ஆனால்) 'வேதனைப்படுத்துவது', 'பொய் சொல்வது', 'வாக்குறுதி மாறுவது', '(காதலனை) மாற்றிவிடுவது' போன்ற குணங்கள் அவளின் உதிரத்துடன் நிச்சயமாகக் கலக்கப்பட்டுவிட்டன.

(குறிப்பு: மேற்கண்ட 7வது கண்ணியிலிருந்து 12ம் கண்ணி வரையுள்ள 6 கண்ணிகளில் சுஆதிடம் – 'பொய்யுரைத்தல்', 'வாக்குறுதி மாறுதல்', 'காதலில் நிலைப்பாடின்மை' போன்ற குறைபாடுகள் இருப்பதாகக் கவிஞர் குறிப்பிடுகிறார். 'நிழலின் அருமை, வெயிலில் தெரியும்' எனும் பழமொழிக்கேற்ப, காதலின் அருமை ஊடலில்தான் தெரியும். காதலி, முற்றிலும் காதலனுக்குக் கட்டுப்பட்டு, வாக்குறுதிகளைப் பெரிதும் பேணி, பொய்யே உரைக்காமல், குறித்த நேரத்தில், குறித்த செயலை முடித்தால் – அல்லது குறித்த இடத்திற்கு குறித்த நேரத்தில் வந்தால் – அவள் காதலனுக்கு ஆவலைத் தூண்டும் ஒரு காதலியாக இல்லாமல், அடிபணியும் ஒரு வேலைக்காரியாகவே ஆகிவிடுகிறாள். இதனால் காதலே அலுப்பு ஏற்படுத்தி விடுகிறது. எனவேதான், கவிஞர், சுஆதை – இவ்வாறு அலுப்பு ஏற்படுத்தாத காதலியாகச் சித்தரித்துக் காட்டுகிறார்.)

فَمَا تَدُومُ عَلَى حَالٍ تَكُونُ بِهَا

كَمَا تَلَوَّنُ فِي أَثْوَابِهَا الْغُولُ ٩

9. மேற்கண்ட காரணத்தால் சுஆது - ஏதாவது ஒரு நிலைமையில் நீடித்திருக்க மாட்டாள். குட்டிச்சாத்தான், தன் ஆடைகளை அவ்வப்போது நிறம் மாற்றிக் கொள்வதுபோல் சுஆதும் தன் நிலையை மாற்றிக் கொள்கிறாள்.

وَلَا تَمَسَّكُ بِالْعَهْدِ الَّذِي زَعَمَتْ

إِلَّا كَمَا يُمْسِكُ الْمَاءَ الْغَرَابِيلُ ١٠

10. சல்லடை, தண்ணீரைத் தனக்குள்ளே தக்கவைப்பதைப் போன்று அல்லாமல் சுஆது, தான் உறுதிபடக் கூறிய வாக்குறுதியைப் பிடித்து நிற்க மாட்டாள்.

فَلَا يَغُرَّنْكَ مَا مَنَّتْ وَمَا وَعَدَتْ

إِنَّ الْأَمَانِيَّ وَالْأَحْلَامَ تَضْلِيلُ ١١

11. எனவே, அவள் உனக்கு ஆசை காட்டி வாக்களித்த விஷயம், உன்னை ஏமாற்றிவிட

வேண்டாம். நிச்சயமாக நிறைவேறாத ஆசைகளும், கெட்ட கனவுகளும் வழிதவறச் செய்யக்கூடியவை ஆகின்றன.

كَانَتْ مَوَاعِيدُ عُرْقُوبٍ لَّهَا مَثَلًا

وَمَا مَوَاعِيدُهَا إِلَّا الْأَبَاطِيلُ ١٢

12. (வாக்குறுதி மாறுவதில் அரபகத்தில் புகழ்பெற்ற) 'உர்கூப்' என்பவனின் வாக்குறுதிகள், சுஆதின் வாக்குறுதிக்கு உவமையாக அமைகின்றன. அவளுடைய வாக்குறுதிகளெல்லாம், உண்மைக்குப் புறம்பானவையாகவே தவிர வேறில்லை.

أَرْجُو وَآمُلُ أَنْ تَدْنُو مَوَدَّتُهَا

وَمَا إِخَالُ لَدَيْنَا مِنْكِ تَنْوِيلُ ١٣

13. அவளின் காதல் என்னை நோக்கி நெருங்குவதை நான் எதிர்பார்க்கிறேன். ஏங்குகிறேன். ஆனால் அவளுடைய தரப்பிலிருந்து (காதல் தொடர்பெனும்) காணிக்கை எனக்குக் கிடைக்குமென நான் நினைக்கவில்லை.

أَمْسَتْ سُعَادُ بِأَرْضٍ لَّا يُبَلِّغُهَا

إِلَّا الْعِتَاقُ النَّجِيبَاتُ الْمَرَاسِيلُ ١٤

14. நெடுந்தொலைவு சென்றுவிட்ட சுஆது, ஒரு நிலப்பரப்பில் இருக்கிறாள். அந்த நிலப்பரப்பை - வலிமையும் வசீகர வேகநடையுமுள்ள - உயர்ந்த இன ஒட்டகங்களைத் தவிர வேறெதுவும் அடையச் செய்யாது.

(குறிப்பு: இந்தப் 14-ம் கண்ணியிலிருந்து 34ஆம் கண்ணி வரையுள்ள 21 கண்ணிகள் மூலம் வருணிக்கப் படும் ஒப்பற்ற ஒட்டகையொன்று இருந்தால் மட்டுமே இனிய காதலி சுஆதிருக்கும் இடத்தைத் தன்னால் சென்றடையவியலும் என்று கூறும், இப்பாவரியிலிருந்து அந்த ஒட்டகையை வருணிக்கத் தொடங்குகிறார், கவிஞர் கஃபு அவர்கள்.)

وَلَنْ تُبَلِّغَهَا اِلَّا عَذَافِرَةٌ

فِيهَا عَلَى الْاَيْنِ اِرْقَالٌ وَّتَبْغِيلُ ⑮

15. நெடுந்தொலைவு நடப்பதினால் ஏற்படும் களைப்பு இருப்பினும் வேகநடையிலும், அதிவேக நடையிலும் இளைக்காத - உயரமும் உறுதியும் மிக்க முதுகெலும்பு உடைய - ஒட்டகத்தைத் தவிர வேறெதுவும் அந்த நிலப்பரப்பை நிச்சயமாக அடையச் செய்யாது!

مِنْ كُلِّ نَضَّاخَةِ الذِّفْرٰى اِذَا عَرِقَتْ

عُرْضَتُهَا طَامِسُ الْاَعْلَامِ مَجْهُوْلُ ⑯

16. நடையின் வேகத்தால், வியர்வை மிகுதியாகப் பிடரிக்குழி வழியே கொட்டக்கூடியதும், பாதை புலப்படாத பாலைவெளியில் தடயங்கள் மறைந்து போன பாதையைக் கண்டுபிடிக்கும் நிலையிலுள்ள தும்தான், (சுஆதிருக்கும் இடத்தை அடையச் செய்யும் ஆற்றலுள்ள) அந்த ஒட்டகம் ஆகும்.

تَرْمِي الْغُيُوبَ بِعَيْنَيْ مُفْرَدٍ لَهِقٍ
إِذَا تَوَقَّدَتِ الْحِزَّانُ وَالْمِيلُ ١٧

17. உறுதியான நிலமும் மென்மையான மணல் துகள்களும் தகிக்கின்ற நண்பகலில் - காட்டெருதின் வெண்ணிறமான இரண்டு கண்களுக்கொப்பான கண்களினால் - பாதையில் மறைந்து போன தடயங்களை நோக்கி - அந்த ஒட்டகம் பார்வையை வீசும்.

ضَخْمٌ مُقَلَّدُهَا فَعْمٌ مُقَيَّدُهَا ١٨
فِي خَلْقِهَا عَنْ بَنَاتِ الْفَحْلِ تَفْضِيلُ

18. அந்த ஒட்டகத்தின் கழுத்து பருத்ததாகவும், கால்கள் கனமானதாகவும் அமைந்துள்ளன. ஏனைய பெண் ஒட்டகைகளைவிட, இந்த ஒட்டகையின் படைப்புக் கோலத்தில் தனிச்சிறப்பு அமைந்திருக்கிறது.

غَلْبَاءُ وَجْنَاءُ عُلْكُومٌ مُذَكَّرَةٌ

(١٩) فِي دَفِّهَا سَعَةٌ قُدَّامَهَا مِيلُ

19. இந்த ஒட்டகம், பிடரி தடித்ததாகவும் கன்னங்கள் கனத்ததாகவும் வலிமை மிக்கதாகவும், கோலத்தில் ஆண் ஒட்டகைக்கு நிகரானதாகவும் அமைந்துள்ளது. இந்த ஒட்டகையின் இரு பாகங்களும் விசாலமானதாகவும், முன்பக்கம் கழுத்து நீண்டதாகவும் அமைந்துள்ளது.

وَجِلْدُهَا مِنْ أُطُومٍ لَا يُؤَبِّسُهُ

(٢٠) طِلْحٌ بِضَاحِيَةِ الْمَتْنَيْنِ مَهْزُولُ

20. கடல் ஆமையின் தோலைப் போன்று அந்த ஒட்டகையின் தோல் உறுதியாக இருப்பதினால், அதன் முதுகின் இரு பக்கங்களிலுமுள்ள சதைப்பாங்கான பகுதியில் - வெயில் படும் நேரத்திலும்கூட - பசியினால் மெலிந்த செதிலும் அடையாளம் ஏற்படுத்தாது.

حَرْفٌ أَبُوهَا أَخُوهَا مِنْ مُهَجَّنَةٍ

(٢١) وَعَمُّهَا خَالُهَا قَوْدَاءُ شِمْلِيلُ

21. மலைச்சிகரம் போன்று பலம் மிக்க அந்த ஒட்டகம், உயர்ந்த இனத்தைச் சேர்ந்ததும், ஒரே குலத்தைச் சார்ந்ததும் கழுத்தும் முதுகும் நீண்டதும் வேகம் மிக்கதும் ஆகும்.

يَمْشِى الْقِرَادُ عَلَيْهَا ثُمَّ يُزْلِقُهُ
مِنْهَا لَبَانٌ وَأَقْرَابٌ زَهَالِيلُ (٢٢)

22. அந்த ஒட்டகையின் மேனியில் ஊர்ந்து வரும் உண்ணி, - ஒட்டகை மேனியின் வழுவழுப்பான தன்மையின் காரணத்தால் - அதன் நெஞ்சு, திமிள் போன்ற இடங்களிலிருந்தே வழுக்கி வீழ்ந்து விடுகிறது.

عَيْرَانَةٌ قُذِفَتْ بِالنَّحْضِ عَنْ عُرُضٍ
مِرْفَقُهَا عَنْ بَنَاتِ الزَّوْرِ مَفْتُولُ (٢٣)

23. அந்த ஒட்டகை, நாலாப்பக்கமும், திரண்ட சதைப்பற்று மிக்க மேனியைக் கொண்ட காட்டுக் கழுதைக்கு ஒப்பானதாகும். அவ்வொட்டகையின் முன்னங்கால் மூட்டுக்கள் இரு பக்க விலா எலும்புகள் நெஞ்சில் இணையுமிடத்திலிருந்து முறுக்கேற்றப்பட்டதாக உள்ளன.

كَأَنَّمَا فَاتَ عَيْنَيْهَا وَمَذْبَحَهَا (٢٤)

مِنْ خَطْمِهَا وَمِنَ اللَّحْيَيْنِ بِرْطِيلُ

24. அவ்வொட்டகையின் - இரு கண்களையும், அறுக்கப்படும் இடமாகிய கழுத்தையும் கடந்து காணப்படும் - மூக்கு, இரு தாடை எலும்புகள் ஆகியவை அமைந்திருக்கும் இடமாகிய - முகம், கோடாரியைப் போல் அல்லது நீள் சதுரக் கல்லைப் போல் - உறுதி மிக்கதாகும்.

تُمِرُّ مِثْلَ عَسِيبِ النَّخْلِ ذَا خُصَلٍ
فِي غَارِزٍ لَّمْ تُخَوِّنْهُ الْأَحَالِيلُ ٢٥

25. அவ்வொட்டகம் - உரோமக் கற்றையுடையதும், ஓலையில்லாத பேரீச்சை மட்டை போன்றதுமான - தன் வாலினை, முலைக் காம்புகளைச் சுருங்கச் செய்யாத மடுவின் மீது நடமாடச் செய்கிறது.

(குறிப்பு: அந்த ஒட்டகையின் மடுவிலிருந்து அறவே பால் கறக்கப்படாத காரணத்தால் அதன் முலைக்காம்பு சுருங்கவில்லை. எனவே அது, எவ்விதத் தளர்ச்சியும் இல்லாமல் மிகத்துரிதமாக நடக்கும் ஆற்றல் பெற்றதாகும் என்பது, இந்தப் பாவரியின் கருப்பொருள்.)

قَنْوَاءُ فِي حُرَّتَيْهَا لِلْبَصِيرِ بِهَا ٢٦
عِتْقٌ مُّبِينٌ وَّفِي الْخَدَّيْنِ تَسْهِيلُ

26. அவ்வொட்டகம் வளைந்த மூக்கையுடையதாகும். 'நல்ல இன ஒட்டகம் யாது?' என்ற அனுபவமுடையோர், இந்த ஒட்டகையின் இரு செவிகளின் பால் பார்வையைச் செலுத்தினால், அவற்றில் தெளிவான குலச்சிறப்பிற்குரிய அறிகுறிகளைக் காணலாம். இதன் இரு கன்னங்களில் மென்மை அமைந்திருக்கிறது.

تَخْدِي عَلَىٰ يَسَرَاتٍ وَهِيَ لَاحِقَةٌ

ذَوَابِلٌ مَسُّهُنَّ الْأَرْضَ تَحْلِيلُ (٢٧)

27. அந்த ஒட்டகை, தன்னுடைய வேகம் மிக்க - ஈட்டியைப் போல் வலிமை மிக்க - கால்களால் விரைந்து நடக்கிறது. இதனால், நெடுந்தொலைவைக் கடந்துவிட்ட ஒட்டகைகளைக் கூட எட்டிப் பிடிக்கிறது. இந்த ஒட்டகையின் கால்கள் பூமியைத் தொடும் நேரம், சத்தியம் செய்த ஒருவர், அதிலிருந்து விடுபடுவதற்காக எடுத்துக் கொள்ளும் கணப் பொழுது நேரமேயன்றி அதிகமாக இல்லை.

سُمْرُ الْعَجَايَاتِ يَتْرُكْنَ الْحَصَىٰ زِيَمًا

لَمْ يَقِهِنَّ رُؤُوسَ الْأُكْمِ تَنْعِيلُ (٢٨)

28. அந்த ஒட்டகையின் கால்களின் குளம்பை ஒட்டியிருக்கும் கணுக்கால் நரம்புகள் தவிட்டு நிற ஈட்டிகள் போல் மிக உறுதியாகவுள்ளன. இத்தகைய

கால்களால் விரைந்து நடக்கும் போது அக்கால்கள் பாலைவனத்துச் சரளைக் கற்களையெல்லாம் சின்னாபின்னமாகச் சிதறடிக்கின்றன. பாலைப் பரப்பில் ஆங்காங்கே உயர்ந்து நிற்கும் கற்களின் - குன்றுகளின் - முனை தாக்காமல் தடுக்க இந்த ஒட்டகைக் கால்களுக்கு லாடம் அடிக்கத் தேவையில்லை. ஏனெனில் லாடமில்லாமலேயே அக்கால்கள் லாடமடித்ததுபோல் மிகவுறுதியாக உள்ளன.

كَأَنَّ أَوْبَ ذِرَاعَيْهَا وَقَدْ عَرِقَتْ
وَقَدْ تَلَفَّعَ بِالْقُورِ الْعَسَاقِيلُ ٢٩

29. அந்த ஒட்டகையின் முன்னங் கால்களிரண்டும், அது நடக்கும்போது - பூமியில் பதிவதும் பூமியை விட்டு உயர்வதுமாக அமைந்துள்ளன. கனல் கக்கும் பாலையில், சிறுமலைக் குன்றுகளைக் 'கானல் நீர்' மூடி மறைக்கும் நிலையில் வெயில் கொளுத்தும் போது - அந்த ஒட்டகைக்கு வியர்வை வழியும் தருணத்தில் - அதன் முன்னங்கால்களின் அசைவு வேகம் எவ்வாறிருக்குமென்றால்...!

يَوْمًا يَظَلُّ بِهِ الْحِرْبَاءُ مُصْطَخِدًا
كَأَنَّ ضَاحِيَهُ بِالشَّمْسِ مَمْلُولُ ٣٠

30. சூரிய வெப்பத்தினால், பாலைவன ஓணானின் உடலின் வெளிப்புறத்தோல் - சட்டி சுட்டதால் கரிந்துவிட்ட ரொட்டியைப் போல் - கரிந்துவிடும்

வண்ணம் கோரவெயில் கொளுத்தும் நாளில், அந்த ஒட்டகையின் முன்னங்கால்களின் அசைவு வேகம் நடையின்போது எவ்வாறிருக்குமென்றால்..!

وَقَالَ لِلْقَوْمِ حَادِيهِمْ وَقَدْ جَعَلَتْ
وُرْقُ الْجَنَادِبِ يَرْكُضْنَ الْحَصَى قِيلُوا ٣١

31. ‘பாலைவனத்துப் பச்சைநிற வெட்டுக்கிளிகள், வெப்பக் கொடுமையினால் தம் கால்களைப் பூமியில் பதிக்கவியலாமல் சரளைக் கற்களின் மீது தாவித் தாவிக் குதிக்கத் தொடங்கி விட்டன. எனவே, ஒட்டகைப் பயணிகளே! நீங்களெல்லாம் நண்பகல் தூக்கத்தை மேற்கொண்டு இளைப்பாறுங்கள்!’ என்று, ஒட்டகையோட்டிகள் (ஒட்டகைப் பாகன்கள்) தாம் வழிநடத்திச் செல்லும் பயணக் கூட்டத்தினரைப் பார்த்துக் கூறும் கோர வெயில் நாளில், சுஆதின் அந்த ஒட்டகையின் வேக நடையால் அதன் முன்னங்கால்களின் அசைவு வேகம் எவ்வாறிருக்குமென்றால்...!

شَدَّ النَّهَارِ ذِرَاعَا عَيْطَلٍ نَصَفٍ
قَامَتْ فَجَاوَبَهَا نُكْدٌ مَثَاكِيلُ ٣٢

32. தமது அருமைச் செல்வக்குழந்தைகளை அதிகமாக இழந்தமையால் முகத்திலடித்துக் கதறியழும் பெண்களுக்கிடையில், நடுத்தர வயதுடைய நெட்டையான நங்கையொருத்தி, தன் செல்லமான தலைக்குழந்தை இறந்த துக்கம்

தாளாமல் முகத்திலடித்துக் கதறியழும்போது - அந்த இளமங்கையின் இரு கைகளும் எவ்வளவு வேகமாக முகத்தை நோக்கியும் முகத்தை விட்டகன்றும் அசையுமோ அந்த அளவுக்கு வேகமாகவும் விரைவாகவும் அந்த ஒட்டகையின் முன்னங்கால்கள் இரண்டும் - உச்சிவெயில் கொளுத்தும் நண்பகலில் பாலையில் நடந்தபோது பாலை மணலை நோக்கியும் பாலை மணலை விட்டகன்றும் அசைந்தன.

نَوَّاحَةٍ رِخْوَةِ الضَّبْعَيْنِ لَيْسَ لَهَا
لَمَّا نَعَى بِكْرَهَا النَّاعُونَ مَعْقُولُ ٣٣

33. முகத்தில் வேக வேகமாக அடித்தழும் நங்கை, ஓலமிட்டு அதிகமாக அழக்கூடியவளாகவும், இரு தோள்புறக்கைகளும் - புயங்களும் - இறுக்கமின்றி இளகலானவளாகவும், அவளின் தலைக்குழந்தை யின் இறப்புத் தகவலை துயரச் செய்தி அறிவிப்பாளர் எடுத்துரைத்தபோது அவள் அதிர்ச்சியினால் சுயபுத்தி இழந்துவிட்டவளாகவும் அமைந்திருந்தால் அவளின் ஒப்பாரியின் போது முகத்திலடிக்கும் கைகளின் வேகம் எவ்வளவு அதிகரிக்குமோ அவ்வளவு வேகமாக அந்த ஒட்டகையின் நடையின்போது முன்னங்கால்களின் வேகம் அதிகரித்தன.

تَفْرِي اللَّبَانَ بِكَفَّيْهَا وَمِدْرَعُهَا
مُشَقَّقٌ عَنْ تَرَاقِيهَا رَعَابِيلُ ٣٤

34. தன் தலைக்குழந்தை இறந்த துயரம் தாளாமல் ஒப்பாரி வைத்து அழும் இளநங்கை - அவள் அணிந்திருக்கும் சட்டை, அவளின் நெஞ்சின் மேற்புற எலும்புப் பகுதியிலிருந்து கந்தல் கந்தலாக கிழிக்கப்படும் வண்ணம் - தன் கைவிரல் நுனிகளால் அவளின் மார்பைப் பிளக்குமளவுக்கு ஒப்பாரி வைக்கும்போது எவ்வளவு வேகமாக அவளின் கைகள் அசையுமோ அவ்வளவு வேகமாக அந்த ஒட்டகையின் (அதாவது, கவிஞரின் காதலி சுஆது இருக்கும் நெடுந்தொலைவைச் சென்றடையத் துணை நிற்கும் அந்த ஒட்டகையின்) முன்னங்கால் களிரண்டும் பாலையில் நடக்கும்போது அசையும்.

(பதினான்காம் இரவு பவுர்ணமி நிலவுக்கு ஒப்பான சுஆதிருக்கும் இடத்தைச் சென்றடையத் துணையாக ஒரு ஒட்டகம், கவிஞருக்குத் தேவைப்பட்டது. அந்த ஒட்டகம் எத்தகைய சிறப்புத் தன்மைகளைப் பெற்றிருக்க வேண்டும் என்பதைத் தான் இப்பாமாலையின் 14–ம் கண்ணியிலிருந்து 34–ம் கண்ணி வரையுள்ள 21 கண்ணிகள் மூலம் கவிஞர் வருணித்துள்ளார்.)

تَسْعَى الْوُشَاةُ جَنَابَيْهَا وَقَوْلُهُمُ
إِنَّكَ يَا ابْنَ أَبِي سُلْمَى لَمَقْتُولُ ٣٥

35. என் இனிய காதலி சுஆதை என்னைவிட்டு அகற்றுவதற்காகக் கோள்மூட்டுபவர்கள் அவளின் இரு பக்கங்களையும் ஓடோடிச் சென்று அடைகிறார்கள். 'அபூ சுல்மா'வின் பேரனே! நிச்சயமாக நீ சுஆதின் ஆட்களினால் கொலை செய்யப்படுவாய்!' எனும் அவர்களின் கூற்று என்னைப் பற்றி சுஆதிடம் அவர்கள் மூட்டிய கோளின் வெளிப்பாடாகும்.

وَقَالَ كُلُّ خَلِيلٍ كُنْتُ آمُلُهُ
لَا أُلْهِيَنَّكَ إِنِّي عَنْكَ مَشْغُولُ ٣٦

36. அபூ சுல்மாவின் பேரனே! நான் என்னுடைய சுய அலுவல்களில் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்ட காரணத்தால் உனக்கேற்பட்ட சோதனையான கட்டத்திலிருந்து நிச்சயமாக உன்னை திசை திருப்ப - விடுவிக்க என்னால் இயலாது!' என்று, 'நான் பெரிதும் உதவுவார்'களென ஆவலுடன் எதிர்பார்த்த தோழர்கள் ஒவ்வொருவரும் கூறிவிட்டனர்.

فَقُلْتُ خَلُّوا سَبِيلِي لَا أَبَا لَكُمُ
فَكُلُّ مَا قَدَّرَ الرَّحْمٰنُ مَفْعُولُ ٣٧

37. எனவே நான், 'அளவற்ற அருளாளன் நிர்ணயித்தது அனைத்துமே நிகழ்ந்தே தீரும். என் போக்கில் என்னை விட்டுவிடுங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன். உங்களுக்குத் தந்தை இல்லாமல் போகட்டும்!' என்று மனம் நொந்து கூறினேன்.

كُلُّ ابْنِ أُنْثٰى وَإِنْ طَالَتْ سَلَامَتُهُ
يَوْمًا عَلٰى آلَةٍ حَدْبَاءَ مَحْمُولُ ٣٨

38. பெண்மணி பெற்றெடுத்த எந்தவொரு மகனும், எவ்வளவு நெடுங்காலப் பிணியும் இன்னலும் இல்லாமல் பாதுகாப்பாக வாழ்ந்தாலும் 'பாடை' எனும் கருவி மீது ஒரு நாள் சுமக்கப்படுபவரேதான். (எப்படியும் மரணம் ஒருநாள், ஒவ்வொருவருக்கும் நிச்சயம் வரக்கூடியதுதான்.)

أُنْبِئْتُ أَنَّ رَسُوْلَ اللّٰهِ أَوْعَدَنِيْ

وَالْعَفْوُ عِنْدَ رَسُوْلِ اللّٰهِ مَأْمُوْلُ ٣٩

39. அல்லாஹ்வின் திருத்தூதரிடத்தில் மன்னிக்கும் பண்பு ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் நிலையில் - அல்லாஹ்வின் திருத்தூதர் என்னைக் கொலை செய்ய வேண்டுமென எச்சரித்ததாக எனக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

فَقَدْ أَتَيْتُ رَسُوْلَ اللّٰهِ مُعْتَذِرًا

وَالْعُذْرُ عِنْدَ رَسُوْلِ اللّٰهِ مَقْبُوْلُ ٤٠

40. எனவே, - கண்ணியம் மிக்க ஏந்தல்களின் இனிய இயல்புகளில் ஒன்றாக இரக்கம் காட்டுவது அமைந்திருக்குமென எதிர்பார்க்கப்பட்ட நிலையில் - மன்னிப்பை நாடி அல்லாஹ்வின் திருத்தூதரிடம் வந்தேன்.

مَهْلًا هَدَاكَ الَّذِي أَعْطَاكَ نَافِلَةَ الْ

٤١ قُرْآنِ فِيهَا مَوَاعِيظٌ وَتَفْصِيلُ

41. அல்லாஹ்வின் திருத்தூதரே! எனக்குச் சிறிது காலதவணை தருவீர்களாக! அறிவுரைகளையும் அரிய விளக்கங்களையும் தன்னுள்ளடக்கிய குர்ஆனைக் கொடையாகத் தங்களிடம் வழங்கிய நாயன் தங்களுக்குத் தந்த நேர்வழியை மேலும் மேலும் ஒளிர வைப்பானாக!

لَا تَأْخُذَنِّي بِأَقْوَالِ الْوُشَاةِ وَلَمْ

٤٢ أُذْنِبْ وَإِنْ كَثُرَتْ فِيَّ الْأَقَاوِيلُ

42. என் விஷயத்தில் பலரின் புனைந்துரைகள் அதிகமாக இருந்தாலும் என் மனம் உண்மையை உணர்ந்த பின் நான் ஒரு பாவமும் செய்யவில்லை. எனவே, கோள்மூட்டுவோரின் கூற்றுக்களின் காரணத்தால் என்னைத் தண்டித்து விடாதீர்கள்.

لَقَدْ أَقُومُ مَقَامًا لَوْ يَقُومُ بِهِ

٤٣ أَرَى وَأَسْمَعُ مَا لَوْ يَسْمَعُ الْفِيلُ

43. நான் ஒரு மகத்தான சன்னிதியில்தான், நிச்சயமாக நிற்கிறேன். யான் நிற்கும் இடத்தில் ஒரு யானை நின்றிருந்தால் - யான் பார்க்கும் காட்சியை ஒரு யானை பார்த்திருந்தால் - யான் கேட்கும் குரலை ஒரு யானை கேட்டிருந்தால் ...!

لَظَلَّ يَرْعَدُ إِلَّا أَنْ يَكُونَ لَهُ
مِنَ الرَّسُولِ بِإِذْنِ اللّٰهِ تَنْوِيلُ ٤٤

44. அல்லாஹ்வின் திருத்தூதரிலிருந்து துணிவூட்டும் தூயமொழிகள் அந்த யானைக்கு - அல்லாஹ்வின் அனுமதியுடன் - கிடைத்தாலே தவிர, அந்த யானைகூட, 'அல்லாஹ்வின் மீது சத்தியமாக!' அச்சத்தால் நடுநடுங்கும்.

حَتّٰى وَضَعْتُ يَمِينِي لَا أُنَازِعُهُ
فِي كَفِّ ذِي نَقِمَاتٍ قِيلُهُ الْقِيلُ ٤٥

45. தீயோருக்குத் தண்டனை நிறைவேற்றக் கூடியவர்களும், தோழர்களால் பெரிதும் மதிக்கப்படும் தூயமொழிகளுக்கு உரியவர்களுமான நபிகளாருடன் பிணக்கு ஏற்படுத்தாத நியில், அவர்களின் திருக்கரத்தில் என் வலக்கரத்தை யான் வைத்தேன்.

لذاك أهيب عندي إذ أكلمه

وقيل إنك منسوب ومقتول ٤٦

46. அத்தருணத்தில் நபிகளாருடன் யான் பேசியபோதும், என்னை நோக்கி, 'கஃபே!' நீ செய்த குற்றங்களின் பால் நீ தொடர்புபடுத்தப்பட்டவன் ஆவாய். உன் குற்றங்களைப் பற்றி விசாரிக்கப் படுபவன் ஆவாய்' என்று கூறப்பட்டபோதும் அந்தச் சூழ்நிலை என்னைப் பொறுத்தவரை மிகவும் அஞ்சத் தக்கதாக இருந்தது.

من خادر من ليوث الأسد مسكنه

من بطن عثر غيل دونه غيل ٤٧

47. சிங்கங்களின் இனத்திலேயே அளப்பரிய வீரமுடைய இனத்தைச் சார்ந்ததும், 'பத்னு அஸ்ஸற' எனுமிடத்திலுள்ள காட்டின் மையத்திலுள்ள உள்காட்டில் வாழக்கூடியதுமான சிங்கத்தைவிட செம்மல் நபிகளாரின் சன்னிதானம் என்னைப் பொறுத்தவரை அச்சமூட்டக் கூடியதாக அமைந்தது.

يغدو فيلحم ضرغامين عيشهما

لحم من القوم معفور خراديل ٤٨

48. காலையில் இரைதேடப் புறப்பட்டு, துண்டந் துண்டமாகக் கடித்துக் குதறப்பட்ட- மண்ணில் புரட்டப்பட்ட - மனித மாமிசத்தைத் தன் குட்டிகளுக்கு இரையாக ஊட்டும் சிங்கத்தைவிட நபிகளாரின் சன்னிதானம் என்னை அஞ்சவைக்கும் நிலையில் அமைந்திருந்தது.

إِذَا يُسَاوِرُ قِرْنًا لَا يَحِلُّ لَهُ

أَنْ يَتْرُكَ الْقِرْنَ إِلَّا وَهُوَ مَجْدُولُ ٤٩

49. வீரத்தில் தனக்கு நிகரான இன்னொரு சிங்கத்தை நோக்கிச் சீறிப் பாய்ந்தால் அந்தச் சிங்கத்தை வீழ்த்தாமல் விட்டுவிடுவது தன் தரத்துக்குத் தகுதியில்லை எனும் நிலையிலுள்ள வீரச் சிங்கத்தைவிட வேந்தர் நபியின் சன்னிதானம் என்னை அச்சமுறச் செய்தது.

مِنْهُ تَظَلُّ سِبَاعُ الْجَوِّ ضَامِرَةً

وَلَا تُمَشِّي بِوَادِيهِ الْأَرَاجِيلُ ٥٠

50. அகன்ற பள்ளத்தாக்கிலுள்ள கொடிய விலங்குகள் எந்தச் சிங்கத்தின் காரணத்தால் ஓசையெழுப்பாமல் அச்சத்தால் அடங்கிவிடுகிறதோ - பாதசாரிகள் எந்தச் சிங்கத்தின் பள்ளத்தாக்கில் நடந்து செல்ல மாட்டார்களோ - அத்தகைய சிங்கத்தைவிட அண்ணலாரின் அவை என்னை அஞ்ச வைத்தது.

وَلَا يَزَالُ بِوَادِيهِ أَخُو ثِقَةٍ

مُطَرَّحُ الْبَزِّ وَالدِّرْسَانِ مَأْكُولُ ٥١

51. தன் மேனியில் அணிந்திருந்த ஆயுதங்கள் சிதறடிக்கப்பட்ட நிலையிலும், ஆடைகள் நைந்துபோன நிலையிலும் துணிச்சல் மிக்க மாவீரர்களின் உடல்கள் எந்த சிங்கத்தின் பள்ளத்தாக்கில் புசிக்கப்பட்ட நிலையில் எப்போதும் காணப்படுமோ அத்தகைய சிங்கத்தைவிட மாநபிகளாரின் மகத்தான பேரவை என்னை பீதியடையச் செய்தது.

إِنَّ الرَّسُولَ لَسَيْفٌ يُّسْتَضَاءُ بِهِ

مُهَنَّدٌ مِّنْ سُيُوفِ اللّٰهِ مَسْلُولُ ٥٢

52. உறையிலிருந்து உருவியெடுக்கப்பட்ட அல்லாஹ்வின் வாட்களுக்கு மத்தியில் - அருமைத் திருத்தூதர் அவர்கள், இருட்டில் ஒளியைப் பாய்ச்சி வழிகாட்டப் பயன்படுத்தப்படும் இந்தியத் திருநாட்டு வாளுக்கு ஒப்பானவர்கள் ஆவார்கள்.

فِي فِتْيَةٍ مِّنْ قُرَيْشٍ قَالَ قَآئِلُهُمْ ٥٣

فِي بَطْنِ مَكَّةَ لَمَّا أَسْلَمُوا زُولُوا

53. குறைஷி குலத்தைச் சார்ந்த குணச் சிறப்போங்கும் கொடை வள்ளல்களின் குழுவில் இலங்குபவரே, கோமான் நபிகளார் ஆவார்கள். மக்காவின் மணிவயிற்றில் வைத்து இந்த மாண்பாளர்கள் இஸ்லாத்தை ஏற்றபோது இவர்களில் ஒருவராகிய ஹஜ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் அனைவரையும் நோக்கி, - 'நீங்களெல்லாம் மதினமா நகர் நோக்கி நகருங்கள்!' என்றார்கள். அப்போது...!

زَالُوْا فَمَا زَالَ اَنْكَاسٌ وَّلَا كُشُفٌ

عِنْدَ اللِّقَآءِ وَلَا مِيْلٌ مَّعَازِيْلُ ٥٤

54. களத்தில் எதிரிகளை சந்திக்கும்போது பலவீனர்களாக இருப்போரும், போர்ப் பயிற்சியற்றோரும், வாளேந்தாதோரும், நிராயுத பாணியானோரும் மதினா நோக்கி நகரவில்லை. (அதாவது, மதினாவை நோக்கி 'ஹிஜ்ரத்' சென்ற முஹாஜிர்கள் அனைவரும், படைக்கலன்கள் ஏந்தியோர்களாகவும், பயிற்சி பெற்ற போர் வீரர்களாகவும், பலம் மிக்கவர்களாகவும் இருந்தனர்.)

شُمُّ الْعَرَانِيْنِ اَبْطَالٌ لَّبُوْسُهُمْ ٥٥

مِنْ نَّسْجِ دَاوُدَ فِي الْهَيْجَا سَرَابِيْلُ

55. அவர்களெல்லாம் உயர்ந்த மூக்குகளை யுடையோராவர். மாவீரர்களுமாவர். போரில் அவர்கள் அணிந்திருக்கும் ஆடைகள், தாவூது நபி (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் நெசவில் உருவான உருக்குச் சட்டைகளாகும்.

بِيضٌ سَوَابِغُ قَدْ شُكَّتْ لَهَا حَلَقٌ
كَأَنَّهَا حَلَقُ الْقَفْعَاءِ مَجْدُولُ ﴿٥٦﴾

56. அந்த உருக்குச் சட்டைகள் வெண்ணிறமான வையும் நீளமானவையுமாகும். 'கஃப்ஆஉ' எனும் மரத்தில் முளைக்கும் வளையங்களைப் போல் உறுதி மிக்க வளையங்கள் அந்த உருக்குச் சட்டைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.

لَا يَفْرَحُونَ إِذَا نَالَتْ رِمَاحُهُمُ
قَوْمًا وَّلَيْسُوا مَجَازِيعًا إِذَا نِيلُوا ﴿٥٧﴾

57. அவர்களின் ஈட்டிகள் குறி தவறாமல் எதிரிகளைத் தாக்கினால் அவர்கள், அதற்காக மகிழ்ச்சியடைய மாட்டார்கள். ஏனெனில், குறி தப்பாமல் தாக்குவது அவர்களுக்கு சர்வ சாதாரச் செயலேயன்றி, ஒரு சாதனையல்ல. திடீர்த் தாக்குதலுக்கு அவர்கள் ஆளானால் அதனால் அவர்கள் திடுக்கிடுவோருமல்ல!

يَمْشُونَ مَشْيَ الْجِمَالِ الزُّهْرِ يَعْصِمُهُمْ
ضَرْبٌ إِذَا عَرَّدَ السُّودُ التَّنَابِيلُ ٥٨

58. வெண்ணிற ஒட்டகைகளைப் போன்று வீறுநடை போடும் அவர்கள் எதிரிகளை தாக்கிக் கொண்டேயிருப்பதால் அந்தத் தாக்குதல்தான் அவர்களை, - கருங்குள்ளர்கள் கதிகலங்கியோடும் வேளையில் - எதிரிகளின் தாக்குதலுக்கு ஆளாகாமல் தடுக்கிறது.

குறிப்பு: நாயகத் தோழர்களில், 'முஹாஜிர்கள்' எனும் வகையினரின் வீரத்தைப் புகழ்ந்து கொண்டே வருகையில் – 'கருங்குள்ளர்கள் கதிகலங்கியோடும் வேளையில்' என்று கவிஞர் குத்திக்காட்டுவது 'அன்சாரிகள்' எனும் வகையினரை ஆகும். அண்ணலாரின் அவையில் கவிஞர் கஃபு அமர்ந்திருக்கும் போது, 'இறைதூதரே! அல்லாஹ் வின் இந்த எதிரியின் கழுத்தைத் துண்டிக்க அனுமதியுங்கள்!' என்று, அன்சாரிகளின் வகையைச் சார்ந்த நாயகத் தோழர் ஒருவர், கஃபை நோக்கிப் பாய்ந்திட முற்பட்டதால், கவிஞர் கஃபிற்கு 'அன்சாரிகள்' மீது ஏற்பட்ட ஆத்திரத்தை – 'கருங்குள்ளர்கள்' என்ற பழிச்சொல் மூலம் வெளிப்படுத்தி விட்டார். ஆனால் இந்தப் பழிச்சொல்லை, 'அன்சாரிகள்' மீது ஏவியதால் அதிருப்தியுற்ற 'முஹாஜிர்கள்' கஃபை நோக்கி, 'அன்சாரிகள் மீது வசைபாடியவர், எங்கள் மீது புகழ்ப்பாடி பயனில்லை!' என்றவுடன் கவிஞர் கஃபு அன்சாரிகளைப் போற்றிக் கீழ்க்கண்ட 59–வது கண்ணியைப் பாடினார்.

لَا يَقَعُ الطَّعْنُ إِلَّا فِي نُحُورِهِمْ ٥٩
وَمَا لَهُمْ عَنْ حِيَاضِ الْمَوْتِ تَهْلِيلُ

59. எதிரிகளின் ஈட்டிமுனைத் தாக்குதல் அவர்களின் மார்பு எலும்புகளிலேயே அன்றி வேறெங்கும் விழுவதில்லை. மரணத்தின் சங்கமத் தலத்தை (போர்க்களத்தை) அடையாமல் பின்வாங்கும் நிலை அவர்களிடம் அறவே இல்லை.

குறிப்பு: பகைவர்களைப் பாய்ந்து தாக்குவதில் - முஹாஜிர்களைப் போல் அன்சார்கள் - சிறுத்தைகளாகச் சீறவில்லையெனினும் - அவர்கள், பகைவர்களுடைய தாக்குதலுக்கஞ்சி புறங்காட்டி ஓடாமல், அவர்களின் ஈட்டி முனைகளையும், கூரிய அம்புகளையும் தம் மார்புகளா லேயே நேருக்கு நேராகத் தாங்கிக் கொண்டனர். 'மரணத்தின் சங்கமத் தலமான போர்க்களத்திலிருந்து உயிருக்கஞ்சி பின்வாங்கும் இயல்பு, அவர்களிடம் இருக்கவில்லை' என்று, அன்சாரிகளின் மனத்துணிவைக் கவிஞர் வருணித்தவுடன், மாநபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தன் சன்னிதானத்திலிருந்த குறைஷிகளைப் பார்த்த பார்வை, 'இந்த கண்ணியை நன்கு கவனியுங்கள்!' என்று தன் கண்களால் சைகை செய்வது போலிருந்தது.

هُمْ جُلُّ أَشْغَالِهِمْ ذِكْرٌ وَتَهْلِيلُ
لِلّٰهِ لَيْسَ لَهُمْ عَنْ ذَاكَ تَعْلِيلُ ٦٠

60. அல்லாஹ்வை தியானிப்பதும் அவனன்றி வணங்கத் தக்க யாருமே இல்லையெனும் திருமொழியைக் கூறுவதுமே அவர்களின் அலுவல்களில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த அலுவல் ஆகும். இந்த அலுவலை விட்டு அவர்களை திசை திருப்பிவிடும் எந்தக் காரணமும் அவர்களிடம் இல்லை.

دَامَتْ صَلٰوةٌ وَّتَسْلِيْمٌ وَّتَبْجِيْلُ
٤١ عَلَى النَّبِيِّ وَتَشْرِيْفٌ وَّتَفْضِيْلُ

61. அல்லாஹ்வின் அருளும் அமைதியும் கண்ணியப்படுத்தலும், சிறப்பித்தலும் மேன்மைப் படுத்தலும் நபிகளார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீது நீடித்துக் கொண்டே யிருப்பதாக!

وَالْآلِ وَالصَّحْبِ هُمْ بُهْمٌ وَّبُهْلُوْلُ
٤٢ وَالتَّابِعِيْنَ لَهُمْ مَّا لَأْلَأَ اللُّؤْلُؤُ

62. மேலும், அண்ணலாரின் கிளையார் மீதும், மாவீரர்களாகவும் மானமிகு தளபதிகளாகவும் அமைந்த தோழர்கள் மீதும், இவர்களைப் பின்பற்றியோர் மீதும் - முத்துக்கள் இலங்கும் காலமெல்லாம், அல்லாஹ்வின் அருள் பொழிவதாக!

# நபியருள் வேண்டல் பாமாலை!

(குறிப்பு : இப்பாடல், இந்நூலாசிரியரான ஆலிம் கவிஞர் **தேங்கை மிஸ்பாஹி**யால், இயற்றப்பட்டு இசை முரசு, ஹாஜி நாகூர் E.M. **ஹனீபா** அவர்களால் ஒலிப்பதிவு நாடாவில் பாடப்பட்டுள்ளது.)

**யாஷஃபீயே! யாஷஹீதே! யாறசூலல்லாஹ்!**
**யாஹாமீம்! யாதாஹா! யாநபியல்லாஹ்!**
**யாஸீனே! தாஸீனே! யாஹபீபல்லாஹ்!**
**யாமக்கீ! யாமதனீ! யப்ன அப்தில்லாஹ்!**

கண்மணியே! விண்மணியே! காத்தமுன்னபியே! – எந்தக்
காலமெல்லாம் புகழ்மணக்கும் கருணையின் நபியே!
பொன்மணியே! நன்மணியே! புத்தொளி நபியே!
போற்றுகிறேன் தங்களையான், உத்தம நபியே!

தஞ்சம் வேண்டி தங்களை நான் கெஞ்சுகின்றேனே
– இன்னும்
தாமிதமேன் ஆருயிரே! எம்பெருமானே!
– இங்கு
விஞ்சுகின்ற அன்பில் நெஞ்சம் வாடுறேன்
– அந்த
நெஞ்சம் உருகி, அழுதழுது தேடுறேன்!
(யாறசூலல்லாஹ், யாஹபீபல்லாஹ்)

கோடிகோடி நேசர்களின் பொன்மனங்களில்
கோலமுடன் வீற்றிருக்கும் கோமான் நபியே!
பாடிப்பாடி போற்றுகின்ற நாவுகளெல்லாம்

பசுமையுடன் மணம்பரப்பும் பயகம்பர் நீரே!
நாடிநரம்பு எலும்புகளில் உயிரணுக்களில்
நாளெல்லாம் வாழுகின்ற நாயனின் தூதே!
தேடித்தேடி அலைகின்றேனே நாளுமே! தங்கள்
திருமுகத்தை யானும் காண வேணுமே!
(யாறசூலல்லாஹ் யாஹபீபல்லாஹ்)

ஆதம்முதல் ஈஸாவரை அனைத்து நபிகளும்
அவரவர்தம் நிலையை எண்ணி அழுது புலம்பவே
நாதியற்ற மானிடர்கள் நரகத்தையெண்ணி,
நடுங்குகின்ற கியாமத்தென்னும் மறுமை நாளிலே
ஆதரவாய் அடைக்கலமாய் உம்மத்தையெல்லாம்
அரவணைத்துக் காப்பதுங்கள் அன்பு உள்ளமே!
வேதநபி நாயகமே! தாங்களில்லாமல்
வேறுதுணை அந்நாளில் யாருமில்லையே!
(யாறசூலல்லாஹ் யாஹபீபல்லாஹ்)

எங்கள் நபியே! மஹ்ஷரிலே லிவாவுல்ஹம்தெனும்
இனியகொடியின் நிழலில் எம்மை ஒதுங்கிடச் செய்வீர்!
தங்க நபியே! தங்கள் ஹவ்ளுல் கவ்ஸரில் நாங்கள்
தண்ணீர் பருகி தாகம் தீர்க்கத் தயவுகாட்டுங்கள்!

வெங்கொடுமை நரகத்தீயில் வீழ்ந்திடாமலே
வெற்றிமிகும் ஷபா அத்தைத் தந்தருள்வீரே!
மங்களங்கள் தங்கும்சொர்க்கப் பதியிலே – உயர்
மகாமுல்மஹ் மூதைக்காணும் மக்கத்து நபியே!
(யாறசூலல்லாஹ் யாஹபீபல்லாஹ்)